# கண்ணகி கற்பு

—நா. சிவபாதசுந்தரன்

# கண்ணகி கற்பு

அல்லது

## வினைச் சிலம்பால் விளைந்த கதை

தொல்புரம்

**புலவர் நா. சிவபாதசுந்தரன் அவர்கள்**

(மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)

ஸ்ரீ காந்தா அச்சகம்,

யாழ்ப்பாணம்.

1955.

விலை: 75 சதம்.

முதற்பதிப்பு: 195[illegible].

உரிமை ஆசிரியருக்கே.

பொ. இரேவதி

# உள்ளுறை.


1. புகழ் நிலைபெற்ற பூம்புகார்.

பூம்புகாரின் பொலிவு நிலை 1
பூம்புகாரில் பூத்த புதுமணம் 5
கணிகை இன்பத்தில் கண்ணகி துன்பம் 7
இந்திர விழாவும் இன்பமுறிவும் 10
மனம்நொந்த கோவலன் மதுரை நோக்கல் 13
நாடும் காடும் நடந்த காட்சி 16

2. மறைவினைக்கு உறவான மதுரை.

மதுரை வீதியில் மலர்ந்த விதி 34
கணவனை இழந்த கண்ணகி 36
பாண்டியன் முன் பத்தினிப்பெண் 39
விண்ணுலகடைந்த வீரக்கண்ணகி 42

3. வஞ்சி வணங்கிய வானுறை தெய்வம்.

குன்றக் குறவரில் குடிகொண்ட கண்ணகி 45
சிலை எடுக்க எழுந்த சித்திரம் 47
நீள் வீரர் நின்ற நீலகிரி 49
வீரத்தமிழர் விரித்த போர் 50
மன்னர் முடியேறிய மாடலன் கண்ணகி 51
ஆர்வமும் உவகையும் அளந்த வஞ்சி 53
கண்ணகி கோயிலில் கண்ணகி 55
அரும்பதவுரை I—IV

# முன்னுரை

ஒருவன் தன்னில் புரட்சி காண்பானாயின் அவனே தான் வாழ் உலகிலும் புரட்சியைக் காண முடியும். இஃது இளங்கோ அடிகள் மூலம் நாம்நன்கு உணரக்கிடக்கின்றது. ஒரு சோதிடன் வந்து இளங்கோவைப் பார்த்து "நீ தான் அரசன்" என்றான். உடனே இளங்கோ "அடா! அண்ணன் இருக்கத் தம்பி ஆளுதல் எந்தவிதி? இவ்விதிக்கு விதிசெய்கின்றேன்" என்று காவியும் கமண்டலமும் கைவிடாது எடுத்தார். இத்தகைய புரட்சிச் செம்மலே சிலப்பதிகாரத்து ஆசிரியர்.

செயல் உலகில் புரட்சி செய்த இளங்கோஅடிகள் சிந்தனை உலகில் செழித்துவாழ்ந்த போது செய்த நூலே சிலப்பதிகாரம். அங்கேயும் சும்மாவிடாது புரட்சி செய்தேவிட்டார்.

மொழியுலகில் காப்பியங்கள் எல்லாம் முடிமன்னர் காப்பியமாய் அமைந்து கிடந்ததைக் கண்ட அடிகளார் அகத்தில், ஏன் குடிமகன் ஒருவனால் ஒரு காப்பியம் செய்யக்கூடாது? என்று புரட்சிநடந்தது. இப்புரட்சிக்கு ஏற்ற பொருள் வேணுமே என்று தேடுகையில், மலைநாட்டில் வாழ்ந்த குடிமக்களால் அவருக்கு ஒரு பொருள் கிடைத்தது. அப்போது குணவாயிற் கோட்டத்தில் இருந்து குன்றாத செழுநடையால் அப்பொருளை வைத்துச் செய்த நூலே சிலப்பதிகாரம். புரக்கும் முடியைப் புல்லாகமதித்த இளங்கோ அடிகளின் காப்பியம், குடிமக்கள் காப்பியம். அது, தமிழ் நாட்டு மக்கள் மக்கள் ஆட்சியில் வைத்த அழியாத சிந்தனைச் செல்வமன்றோ? மற்றைக்காப்பியங்கள் எல்லாம் ஆண்மகனை வைத்து ஆக்கி நிற்க, பெண்மகளை வைத்துச் சிலப்பதிகாரம், மணிமேகலை என்ற காப்பியநூல்களையாத்த பண்பு, தமிழ்மொழியாகிய எம்மொழிக்கே உரிய தனிப்பண்பாகும்,

பிறர் வழிபோகாது தன்வழிக்குத் தானே வழிவகுத்து வாழ்ந்த இளங்கோவின் சிலப்பதிகாரமும் தனிவழியுடைத்தாயே விளங்குகின்றது. முடிமன்னர் காப்பியத்திற்குக் கல்லறை கட்டிய இளங்கோவடிகள் குடிமக்கள் காப்பியத்திற்குக் கால்கோலக் கற்சிலைநாட்டும் சிலப்பதிகாரத்தின் நிறைவை நாம் நினைக்கும் தோறும் அவர்தம் அகப்புரட்சி அலையலையாக வந்து மோதிக்கொண்டிருக்கின்றது.

வீட்டிலும் புரட்சி! நாட்டிலும் புரட்சி!! வீட்டிற்குரிய பெண்ணை நாட்டில் விட்டு, நாட்டுக்குரிய ஆணை வீட்டில் வைத்துச் செய்யும் புரட்சி ஒருபெரும் வியப்பாய் உள்ளது. கண்ணகி வீட்டிலும், மாதவி வீட்டிலும் ஏற்படும் மாற்றம் கோவலனாலேயே அமைகின்றது. பாண்டி நாட்டிலும், சேரநாட்டிலும், ஏன்? சோழநாட்டிலும் மக்களிடையில்-சமுதாயத்தில் ஏற்படும் மாற்றம் கண்ணகியாலேயே ஏற்படுகின்றது.

"பிறப்பால் குலம் அமையவில்லை; ஒழுக்கத்தாலேயே குலம் அமைகின்றது." என்ற புரட்சியைக் கோவலன், மாதவி என்பவர்களின் சிக்கல் நிறைந்த வாழ்க்கையால் தெருட்டுகின்றார் அடிகளார்.

பூம்புகாரில் தற்காத்து இருந்த கண்ணகி மாமதுரையிலே தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்து நின்று, வடாவஞ்சியில் சொற்காத்தலின் செம்மையால் கோயிலில் எழுந்த செய்கையைக் கண்டு கொண்ட அடிகளார்; முடிமன்னர்களால் மூன்றுதலையாய் மூழ்கிக் கிடந்த தமிழ்நாட்டை ஒருதலையாய் ஒருமைப்படுத்தும் இடத்தும், வடநாடு, தென்னாடு என்று பன்மைப்படுத்தல் இன்னொரு பெருவியப்பான புரட்சியன்றோ!

கண்ணகியாரிடம் சிலர் "மதுரையை எரித்தல் பெண்மைக்குப் பெருந்தவறு; அறத்திற்கு அவமானது;" என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இதில் என் எண்ணத்தைக் கூறியே ஆகவேண்டும். கம்பராமாயணம், சீவகசிந்தாமணி போன்று சிலப்பதிகாரம், வரலாற்று நிழலைச் சிதைத்து வந்த இலக்கிய நூல் அல்ல, இதன் ஆசிரியனோ, தத்துவப் புலவன், தத்துவப் புலவன் கலையுலகில் உலவும்போது, தத்துவத்தையே மேலாடச் செய்வான். சிலப்பதிகாரம், கலையிலும் பார்க்கத் தத்துவத்திற்கே முதன்மை கொடுப்பதுடன்; வரலாற்றின் நிழலைச் சுருக்கவோ, விரிக்கவோ முடியாத ஆற்றலுக்குள் அமைந்து செல்கின்றது.

கண்ணகியார் மதுரையில் இடையர் சேரியில் தற்கொண்டானைப் பேணிச் செயலாற்றும்போது, தகைசான்ற சொல்லுக்கு இழுக்கு நேர்ந்ததே என்பதை மக்கள்-சமூகம்வாயிலாக அறிகின்றனர். சமூகம் "தன் கணவனைக் கள்வனென்றும், தன்னை அக்கள்வனின் மனைவி என்றும் அலர்மொழிதூற்றப் போகின்றதே என்று கண்ணகி எண்ணியவுடன், 'இதில் நான் சோர்வடைதல் அறமன்று' என்று துணிந்து தன் கணவ

னைத் தெய்வமாகப் பாவித்து இதுவரையுங் கைதொழுது வாழ்ந்தவள். கணவன் கையற்றநிலையில், சூரியனுகிய கடவுளைக் கண்கொண்டு கைகூப்பி வாய்விட்டுக் கூப்பிட்டுத் தன்னை ஒப்படைக்கின்ருள். அத்தெய்வத்தின் உரைப்படி உள்ளுணர்வு உடையவளாய், துகில் உரியும்போது கணவரால் கைவிடப்பட்ட பாஞ்சாலி கண்ணன் வாய்ப் பட்டு நின்றபோல ஒருமைத் தோற்றத்துடனே அத்தெய்வம் உள்நின்று தொழிற்படக் கண்ணகி தெய்வ வயப்பட்ட பெண்ணுய் அமைந்தாளே ஒழிய, உலகப் பெண்ணுய்—மன்பதைவாய்ப் பட்டு நின்று உரை செய்ய வில்லை. இதற்குக் கண்ணகியார் பாண்டிமாதேவி இறந்து பட்ட தன்மை அறியாத நிலையில் வஞ்சினம் கூறலே தக்கதோர் சான்ருகும்.

இன்னும் இளங்கோவடிகள் கண்ணகியாரை அக்கினிதேவன், மதுராதெய்வம், தேவர்கள் என்ற இப்படிப்பட்ட விண்வாழ்மக்களோடு தொடர்படுத்திக் கொண்டு செல்வதையும் ஆழ்ந்து நோக்கவேண்டும்.

இன்னும் வையத்து வாழ்வாங்கு வாழும் ஒருதனிமனிதன் வாழ்வைச் சமுதாயம் சிதைக்கின், அச்சமுதாயம் பின் சிதையுமே ஒழியச் சிறப்புருது என்பதே மதுரை எரிவாய்ப்பட்டது, என்பதனின் பொருளாகும். இப்பொருள் எப்படி நமக்குக் கிடைத்தது என்ருல், கண்ணகி 'மதுரையை முலையால் எரித்தாள்' என்பதைக் கொண்டே யாம். 'முலை' என்ருல், உயிரைக் காப்பது என்பதே பொருள். அதாவது, வளர்ச்சிப் பண்பாட்டைக் குறிப்பது. "கணவனை இழந்த கண்ணகிக்கு இனி இவ்வுலகில் என்ன வளர்ச்சி யிருக்கிறது? வள மிருக்கிறது?" என்று எண்ணி, வாழ்வுக்கும், வளத்திற்கும், வளர்ச்சிக் கும் அடிப்படைச்சின்னமான தன் முலையைத் திருகி எறிந்தாள். "காரிகையார் தங்கள் முலையளவே ஆகுமாம் மூப்பு" என்ற நல்வழி யும், "முலையிரண்டும் இல்லாதாள் பெண் காமுற்றற்று" என்ற திருக் குறளும் கண்ணகியார் செய்த செய்கையின் நுட்பத்தைத் தெளிவாக்கு கின்றன. இஃது கண்ணகியாரின் தன்னலமறுப்புக் கொள்கையாகும். இத்தன்னல மறுப்பே, தன்னலத்துடைய மதுரையின் அழகை அழித் தது என்று எண்ணவேண்டுமொழிய புறப்பொருளில் வரும் "ஊரை எரியூட்டல்" போல எண்ணுதல் கூடாது. இளங்கோவின் 'முலையால் எரித்தாள்' என்ற இலக்கியக்கலையின் தத்துவம், மிகமிக ஆழமான அறமுடைய உரையன்ரே!

யேசுநாதரின் தனித்தன்மையைத் தடுத்த யூதர்கள் இன்று சமுதாய முறையாக வாழமுடியாது கிடப்பது போல, அன்று மதுரையும் அழிந்துகிடந்தது என்று உன்னலே உரித்தாகும். இன்னும் ஜனசக்தியின் எதிர்ப்பின்முன் அரசசக்தி நில்லாது ஒழியும் என்றும்; நீத்தார் நிலவுலகின் போக்கை எதிர்ப்பின், நிலவுலகின் போக்கு தடைப்படும் என்பதுமே, கண்ணகி மதுரையை எரித்த செய்தியின் உட்பொருள் என்க !

நிற்க, சத்தியசரிதையின் தமிழ் நடைக்கும் இந்நூலின் தமிழ் நடைக்கும் பெரும் வேற்றுமையுண்டு. இதன் நடையில் செறிவு எவ்வளவோ தளர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாணவர்களுக்கு நூல் எழுதும் ஒருமன எண்ணத்தைத்தந்தவர் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய ஆசிரியர், அன்பர் திரு. T. சீனிவாசகம் அவர்கள். நான் அவர்களுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளேன். இந்நூலில் குறியீட்டுப்பிழைகள் மலிந்துள்ளது அறிஞர்கள் பொறுப்பாராக. இந்நூல் அச்சாகும் காலத்தில் அச்சுப்பிழைகளைத் திருத்தி உதவிய அரிய நண்பர்கள் பண்டிதர் திரு. அ. ஆறுமுகம், ஆசிரியர் செ. கதிரேசபிள்ளை ஆகிய இவர்களுக்கும் என் நன்றி உரித்தாகுக. வணக்கம்.

தமிழ்நிலை,
தொல்புரம்,
15-2-55.

*நா. சிவபாதசுந்தரன்*

# கண்ணகி கற்பு
அல்லது
# வினைச் சிலம்பால் விளைந்த கதை.

## ௧. புகழ் நிலைபெற்ற பூம்புகார்.

### 1. பூம்புகாரின் பொலிவு நிலை.

"பாருக்குள்ளே நல்ல நாடு — எங்கள்
பாரத நாடு"

என்று பாடியருளினர் எங்கள் பாரதியார். என்ன தீர்க்க ஞானம். இக்கால அமரிக்காவையும் ரூசியாவையும் விடவா பாரதநாடு சிறந்தது? ஆம்! இதில் என்ன ஐயம்! ஞானம், பரமோனம், உயர் மானம், அன்ன தானம்; இவையா? தீரம், படை வீரம்; நெஞ்சின் ஈரம், உபகாரம்; இன்னும் எவ்வளவோ உண்டு; இவை சொல்லின் அடங்கா. உலகம் உவக்கும் உயர்பொருட் செய்திகள் பாரதநாட்டிலேதான் உண்டு. இதற்கு ஊற்று, தமிழ் நாடே. இதனை உலக வரலாறே உரைக்கும். இன்றைய இமையம் உயர்ந்தோங்கும்முன் இந்தியாவின் நிலப்பரப்பு தண்தமிழ் வழங்கிய நிலப்பரப்பாகும். இந் நிலப்பரப்பின் செய்திகளே பாரத நாட்டின் பழம்பெருஞ் செய்திகளாகும். இச்செய்திகளால் நல்லநாடாயிற்று பாரதநாடு. எனவே பாரதநாடு என்றவுடன் பழந்தமிழ் நாட்டின் பண்பையே உன்ன வேண்டும்; உரிமையாக்க வேண்டும்; எனத்தெளிக.

தெய்வ அருள் தேங்கப் பெற்ற தென் தமிழ் நாடு, முன்னர் மூன்று பெரும் பகுதிகளாக வகுக்கப் பட்டிருந்தது. அம் மூன்றையும் மூன்றுகுல முடிமன்னர் அரசு புரிந்தனர். அம் மன்னர்களைக் கொண்டே அவைகளுக்குச் சேர, சோழ, பாண்டிய நாடுகளெனப் பெயர்கள் அமைந்தன. இம்

மூன்று நாடுகளில் ஈண்டு எடுத்து எழுதும் நாடு சோழ நாடா கும். சோழநாடு என்றவுடன் நமக்குச் சோற்றின் நினைவு வருகின்றது. ஏன்? தனித்து உண்பதிலா? இல்லை! பகுத் துண்டு பல்லுயிர் ஓம்பும் அறத்தின் நிலைக்களமாய் நிற்ப தால் என்க. இச்சோழ நாட்டின் தலைநகர் காவிரிப்பூம் பட் டினம். அது காவிரி கடலோடு கலக்கும் முகத்திலுள்ள ஒரு துறைமுகப் பட்டினம். அதற்குப் "புகார்" என்ற மற்றொரு பெயரும் உண்டு. இதை இளங்கோவடிகள் "பூம்புகார்" என்று அடை கொடுத்து அழகுபடுத்தியுள்ளார். "பூ" என் பதற்குப் "பொலிவு" என்பது பொருள். புகாரின் பொலிவு அந்நிலத்தை ஆண்ட அரசனின் பொலிவால் அமைந்தது என்க. அவ்வரசனே 'கரிகால் வளவன்' என்ற பெயருடை யவன். இவன் குடைபோலவே உலகில் திங்கள் நிகழும்; இவன் செங்கோலின் ஆணை போலவே ஞாயிறு சுழலும்; இவன் கண்ணோட்டம் போலவே மழையும் பெய்யும். இதுவே இவனின் பொலிவென்க. இவ்வுரையால் அரசனின் அழ கும் நாட்டின் அழகும் ஒருங்கு அமைந்து விளங்குதல்காண்க. இதனாலேயே "பூம்புகார் போற்றுதும்! பூம்புகார் போற்று தும்" என்று முற்றத்துறந்த சேரமுனி இளங்கோவடிகள் போற்றுகின்றார். "நாகலோகமும் தேவலோகமும் போன்ற போகம் பொலிந்து, புகழ் நீண்ட புகார்" என்கின்றார் பிறி தோரிடத்தில். இத்தகைய பூம்புகார் மருவூர்ப் பாக்கம், பட் டினப்பாக்கம், இடைநிலம் என்று மூன்று பிரிவாகப் பிரிக் கப்பட்டுள்ளது. இவைகளின் தனிப்பெருமைகளை இனி நோக்குவாம்.

**மருவூரின் மாண்பு:** மருவூர்ப் பாக்கத்தில் மாடமாளிகைகள் மான்விழி போன்ற சாளரங்களைக் கொண்டனவாய் மாண்புறவிளங் கும். காவிரியின் முகத்தில் கண்ணுக்கு எட்டாததூரம் வணிகர் இருப்பிடங்கள் விண்ணிலே விளங்கித் தோன்றும். யவனர் என்ற பெயருடைய பிறமக்கள் தமிழ் மக்களோடு நீரோடுநீர் கலந்தாற்போல் நெஞ்சு ஒன்றிவாழும் இருப் பிடங்களும் இலங்கித் தோன்றும். விடுபூ, தொடுபூ, கட்டுப்பூ முதலிய பூக்களும்; சாந்து, கந்தகப்பொடி, அகில், கர்ப்பூரம் முதலிய நறும்புகைச் சரக்குகளும் விற்பவர்கள் சுற்றித் திரியும் நகரவீதியும் நலம்பெற விளங்கும். அவ்வீதியில் பட்டாலும் கம்பளியாலும் பருத்திநூலாலும் நுண்ணிய

வேலைசெய்தலில் வல்லவராய நெய்வோர் இருக்கைகள் சீர்மையுறத் தோன்றும். இன்னும் முத்தும் மணியும் பொன்னும் ஆகிய அளந்து கரைகாணா வளங்கள், கலந்து குவிந்துகிடக்கும் அகன்ற தெருக்கள் அழகாக விளங்கும். நெல்லும், புல்லும், வரகும், தினையும் முதலிய எண்வகைக் கூலங்கள் குவித்த கூல வீதியும் குறைவிலாது தோன்றும். பிட்டு வாணிபர், அப்பம் சுடுபவர், உப்பு வணிகர், வெற்றிலை கட்டுவோர் ஒருபுறம் ஒழுங்காய் அமைவர். வெண்கலக் கன்னரும் தச்சரும், கொல்லரும், தட்டாரும் தத்தம் கை வினைத்திறத்தால் கவின்பெற்ற பொருள்களை வைத்து மறுபுறத்தை மாண்புறுத்துவர். ஏழிசை வழுவின்றி எழ, யாழும் குழலும் பயிலும் குழலாளரும் பாணரும் இன்னொரு இருப்பில் இனிமைமிக இருப்பர்.

இனிப் பண்பு சான்ற பெரியோர் வாழும் பட்டினப் பாக்கம் அறம் நினைந்து வாழும் அரச வீதியும், வணிகரின் மாடமாளிகை மலிந்த வணிக வீதியும்,

**பட்டினப் பண்பு:** மறையோர் வாழும் மங்கல வீதியும், வேளாளர் வாழும் விழுமிய வீதியும், விளங்கித் தோன்றும். இன்னும் குதிரைப்பாகர், கடுங்கண் மறவர் ஆகியோர் அரண்மனைப்புறத்தைச் சுற்றியிருந்து பட்டினப்பாக்கப் பண்பை மிகுவித்தனர்.

பட்டினப் பாக்கத்தில் ஐந்து அற்புத மன்றங்கள் அமைந்துள்ளன. முதலில் வெள்ளிடை மன்றம் காணப்படும். அதில் சரக்கு மூட்டைகள் குவிந்திருக்கின்றன. அம் மூட்டைகளில் இன்னார் சரக்கு என்று முத்திரை இடப்பட்டிருக்கும். மூட்டைக் குரியவர் தத்தமது சரக்குகளை எடுத்துச் செல்வர். காவலின் தேவை கூட இல்லாமல் சரக்குகள் ஒழுங்காக உரியாருக்குச் சேருகின்றன. யாவராயினும் கள்வர் ஒரு மூட்டையைத் திருடினால், அவர் அம் மூட்டையைத் தங் தலையில் வைத்துக் கொண்டே அலைந்து திரிவதன்றி எங்குங் கொண்டு போக முடியாது. அந்த வெள்ளிடை மன்றத்தை நினைத்தால் கள்வரும் கலங்குவர்.

அப்பால் ஒரு இலஞ்சி மண்டபம் உள்ளது. இலஞ்சி என்றால் மடு — பொய்கை என்று பொருள்படும். கூன், குறள், ஊமை, செவிடு, தொழு நோயாளர் ஆகியோர் அப் பொய்கையில் முழுகி வலஞ் செய்தால் குறைகளெல்லாம் நீங்கி, உடல் நல்ல நிறம் பெற்று அழகுறுவர்.

அப்பால் ஒரு ஒளிக்கல் மண்டபம் உள்ளது. அதில் ஒளி வீசும் நெடிய கல் நடப்பெற்றுள்ளது. வஞ்சர், மருந்து வைத்துப் பித்தரானோர், நஞ்சுண்டு உடல் நடுங்கித் துன்புறுவோர், பல்லழுந்தக் கொடிய பாம்பால் கடிபட்டோர், பேய் பிடித்தோர் இவரனைவரும் அந்த ஒள்ளிய கல்லை ஒரு முறை சுற்றித் தொழுதால் இடர் நீங்கி இன்புறுவர்.

இதன் பின் பூதச் சதுக்கம் உள்ளது. அதில் ஒரு பூதம் உண்டு. "போலித்துறவிகள், வேசையர், பிறர் மனை நயந்தோர், போலி அமைச்சர், பொய்க்கரி புகன்றோர் புறஞ் சொல்வோர் ஆகிய இப்படிப்பட்டவர்கள் இதோ என்கையில் உள்ள பாசத்திற் படுவார்கள்," என அவ்வூர் எல்லையினின்று நாலுகாதம் கேட்கும்படி நடுங்குகுரல் எடுத்து அப்பூதம் கூவும். இதனால் இப்படிப்பட்டவர்கள் இவ் எல்லையில் இருந்து வாழார்கள்.

அப்பால் ஒரு பாவை மண்டபம் காணப்படுகின்றது. அங்கொரு பாவை உள்ளது. அரசன் நீதி தவறின், அறங் கூறும் அவையில் நிந்தைபட நீதி சொல்லின் "நீதி கோடியதே" என்று அப்பாவை நாவினால் நவிலாது நவை நீர் உகுத்து அழும். இவ்வாறான இன்னியல்களால் பட்டினப் பண்பு மிகுவதைக் காண்க.

இந்த இரண்டு பாக்கங்களுக்கும் நடுவே உள்ளது இடை நிலம். இரண்டு வேந்தரின் பாசறைகளுக்கு இடையிலே உள்ள களத்தில் போரொலி கேட்பது போல இந்த இடை நிலத்தில் நாளங்காடிகளின் ஒலி கேட்கும். இந்நிலம் மரங்கள் நிறைந்த சோலை. விற்பனையாளர்கள் அம் மரங்களையே கால்களாகக்கொண்டு ஒழுங்காகக் கடைகள் கட்டி யிருக்கின்றார்கள். இச்சோலை ஓசை மயமானது.

**இடை நிலத்தின் இனிமை:**

இந்த நாளங்காடியில் ஒரு பூதத்தின் பலிபீடம் உள்ளது. அப்பூதம் வெற்றிவேல் மன்னனான முசுகுந்தனுக்கு வந்த இடர்களை நீக்க, இந்திரனால் அனுப்பப் பெற்று, அந்நாள் முதல் இந்நகரைக் காத்து நின்றது. சித்திரைப் பூரணையில் மறக்குலப் பெண்கள் அழகான கோலத்துடனே அப்பூதத்தின் பலிபீடத்தில் பூக்கள் தூவி, அவரை, துவரை, நிணச்சோறு முதலியவைகளைப் படைத்துப் பொங்கலிட்டு,

நறும்புகை காட்டி, கைகோத்துக் குரவைக் கூத்தாடி "எமது மன்னன் ஆளும் மண்ணகம் முழுவதும் பகை, பிணி, பசி இன்றி மழையும் வளமும் சுரந்து செழித்து வாழ்க!" என்று ஓசை அதிரநிற்பார்கள். இன்னும் மருவூரில் உள்ள மறவலி வீரரும் பட்டினத்தில் உள்ள படை வீரரும், "மன்னனுக்கு உற்ற தீங்குகளை நீக்குவாயாக" என்று பலிக்கொடை புரிந்து பூதத்தை வணங்குவர்.

இவ்வாறு பூம்புகார் பொருளிலும் புகழிலும் நிறைந்து நின்ற காட்சி நம்மையும் வியப்பில் ஆழ்த்தி இளங்கோவடிகளுடன் "பூம்புகார் போற்றுதும்! பூம்புகார் போற்றுதும்!! என்று புகழச் சொல்லுகின்றதன்றோ. என்னே! சோழ நாட்டின் சித்திரம்! தமிழ் நாட்டின் தனிக் கோலம்!!

## 2. பூம்புகாரில் பூத்த புதுமணம்.

பூம்புகார் வணிகர் மலிந்த மாநகரம். இவ்வணிகர், புகழ் பூத்த மன்னருடன் மருவிவாழுஞ் செல்வர். இவர் வண்டியிலும் வள்ளத்திலும் கலத்திலும் பெரும் பொருளீட்டுவர்; கொள்வதும் மிகக் கொளாது கொடுப்பதும் குறை கொடாது பலவகைப் பண்டமும் விலை பகர்ந்து விற்பர். இவ்வணிகரில் இருவர் பலரும் ஏத்தும் ஏற்றமும் புகழும் வாய்ந்தவர். ஒருவன் மாநாய்கன்; மற்றொருவன் மாசாத்துவன். இருவரும் இணையில்லா இருநிதிக்கிழவர். பூம்புகாரின் பொருள் மன்னர்.

கடிமணம் :

மாநாய்கன் மகளே கண்ணகி. பன்னிரண்டு வயதடைந்த கண்ணகி பண்பிற்பழுத்து, திருமகள் போன்று சிறந்த மணவழகியானாள்.

> "போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
> தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
> மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
> காதலாள் பெயர்மன்னுங் கண்ணகி என்பாள்மன்னோ."

என்று கண்ணகியின் அழகு கனிந்த நிலையை இளங்கோவடிகளார் பாடுவாராயினர்.

மாசாத்துவான் பெருநிலம் முழுவதும் கொள்ளும் பெருஞ் செல்வம் படைத்தவன். ஈட்டலும் ஈதலுமே தன் கடனாகக் கொண்டு வாழ்ந்தவன். இவனுடைய மகனே கோவலன். கோவலன் அறிவு, அழகு அனைத்திலும் சிறந்துஉலகம் புகழும் உத்தமன் ஆனான். பண்ணினும் இனிய தீஞ்சொற்பாவையர் இவனைக் கண்டு வியந்து இவனே செவ்வேள் என்று தம் தோழியர் குழுவில் குறித்துப் பேசுவர்.

**"மண்தேய்த்த புகழினான் மதிமுக மடவார்தம்**
**பண்தேய்த்த மொழியினார் ஆயத்துப் பாராட்டிக்**
**கட்டேத்துஞ் செவ்வேளென்று இசைபோக்கிக் காதலாற்**
**கொண்டேத்துங் கிழமையான் கோவலனென் பான்மன்னோ."**

என்று கோவலனையும் சேரமுனி சொல்லிய திறன் நோக்குக. இத்தகைய இருவரும் இணைந்து வாழ அவர் களின் பெற்றோர்கள் எண்ணினார்கள். அவ்வாறே மண நாளை நிச்சயித்து மணமலர் அணிந்த மங்கையர்கள் பட்டத்து யானையின்மீது ஏறித் திருமணச் செய்தியை அறி வித்தார்கள். அந்நாளில் முரசடிக்க, மத்தளம் அதிர, மங்கலமுழக்கமே எங்கும் நிலவியது. மாலைகள்பொருந்திய சென்னியையுடைய வயிரமணித் தூண்களையுடைய மண்ட பத்தில், நீலப்பட்டினாலாகிய முத்துப் பந்தரிடத்தே மறையோர் தீ வளர்க்கக், கோவலன் கண்ணகியுடன் அத் தீயை வலம்வந்து திருமணஞ் செய்தான். வழக்கம்போல் மகளிர் கூடி, "காதலனைப் பிரியாமல், தழுவும் கை நெகிழாமல், தீதுஅற்ற வாழ்க்கை வாழவேண்டும்" என்று வாழ்த்தி மலர்தூவி மங்கல நல்லமளி ஏற்றினர்.

கோவலனும் கண்ணகியும் தமது நெடுநிலை மாளிகை யின். நாலாந் தட்டில் மணிக்கால் அமளியில் வீற்றிருந்தனர்.

**இல் இன்பம் :** அம் மாளிகைச் சாளர வழியே கழுநீர், ஆம்பல், குவளை இவைகளின் மணத்தை அள்ளித் தென்றற்காற்று வீசியது. நறு மணங் கமழும் மலர்களின் நலத்தினை உண்டு மகிழ்ந்த வண்டுகள் சாளரவழியாய் வந்து எங்கும் ஓடிச் சுழன்று இன்புற்றிருந்தன. காதலர் இருவரும், மன்மதன் மகிழும் மணிநிலா முற்றத்தில் பாரிருள் நீக்கும் படரொளி ஞாயிறும் திங்களும் போல் இனிதிருந்தனர். கோவலன்

கண்ணகியின் கவின் பெறு தோளில் கரும்பும் வல்லியும் எழுதினான். அவள் மார்பில் கோவலன் தொய்யில் எழுதினான். பின் இருவரும் செந்தேன் சொட்டும் செவ்விய மாலைகளை அணிந்தனர். அம்மாலைகள் குலைந்து நெறிபிறழும்படி மார்புறத்தழுவி மணவின்பத்தில் மூழ்கினர். கோவலன் தீராக்காதலினால் கவவுக்கை நெகிழாமல் தன் காதலியின் குலத்தையும் குணத்தையும் பலவாறாகப் புகழ்ந்தான். "மாதே! மணி நிற மஞ்ஞை நின்மென்மைக்கு ஆற்றாது காட்டுக்குச் சென்றது. அழகிய அன்னங்கள் உனது அமைவுடை நடைக்கு அஞ்சியே மலர் மிகுசோலையில் மறைந்தன. பசுங்கிளியும் பண்ணுடை யாழும் குழலும், அமிழ்தம் குழைத்த நின்மொழியைப் பயில்வன போலும், என்றும் நின் கையகத்தவாயின" என்று பெரு நயப்புரைத்து, கண்ணகியின் கையது விடாது மீண்டும்

**"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!**
**காசறு விரையே கரும்பே தேனே**
**அரும் பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே**
**பெருங்குடி வாணிகன் பெருமட மகளே**
**மலையிடைப் பிறவா மணியே என்கோ**
**அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ**
**யாழிடைப் பிறவா இசையே என்கோ"**

என்று கண்ணகியைக் கருத்தொடு கலைமலிய நலம் பாராட்டி மகிழ்ந்தான். கோவலனின் நற்றாய், தன் மகனும் மருகியும் இல்லறம் என்னும் நல்லறத்தை இனிது நடத்த, இவர்களைத் தனி மாளிகையில் தனிமையாக வாழ்ந்து வரச் செய்தாள். இருவரும் இவ்வாறு தனிப்போக்கில் இல்லின்பத்தைச் சில ஆண்டுகளாக இனிது நடத்தி வந்தனர்.

## 3. கணிகை இன்பத்தில் கண்ணகி துன்பம்.

பூம்புகார் நகரில் மாதவி என்னும் நாடகமாது இருந்தாள். இவள் பிறப்பின் ஒழுக்கம் பெற்ற பேரழகியாக ஐந்தாமாண்டிலே நடனக்கலையில் நாட்டங் கொண்டாள்; ஏழாண்டுகளில் எல்லாம் பயின்று, பன்னிரண்டாம் வயதில் பார்க்கும் ஆடலிலும், கேட்கும் பாடலிலும், நோக்கும் அழகிலும் நிறைந்து நின்றாள்.

**மாதவி ஆடலில் மயங்கிய கோவலன் :**

இதனால் இவளின் பெற்றோர் அவ்வாண்டிலே திருமாவள

வன் முன்னிலையில் கற்றகலைகளை அரங்கேற்றினர். அவ்வரங்கேற்று அவையில் கோவலன் அணிவகுத்த ஆடலில் ஆய்ந்து அமிழ்ந்தினன். அந் நடனமோ குழலின் வழியே யாழ் நிற்க, யாழின் வழியே மத்தளம் நிற்க, மத்தளவழியே முழவு நிற்க நன்னிலை பெற்று முடிந்தது. அரசனும் "தலைக்கோல் அரிவை" என்ற பட்டமும் பணமுடிப்பும் அளித்து மாதவியை மதித்தான். அப்போது, மின்னொளி போற் தோன்றி இன்னொளியின் இடையே, இன்பநடம் புரிந்த மாதவியின் மாறு அழகில் மன்னர் நிகர் கோவலன் மனத்தை விட்டான்.

மன்னர் அளித்த மாலையை மாதவி தோழிகையில் கொடுத்து, "மாற்றுயர்ந்த பசும் பொன் ஆயிரத்தெட்டு விலையாகப் பெறுதற் குரியது இம்மாலை; இதை எவன் பெற்றானோ அவனே என் அன்பனுவான்" என்று சொன்னாள். தோழியும் மாதவியும் மணமாலையை வீதி வழியிற் கொண்டு சென்றாள். தன் உள்ளக் கிழியில் மாதவியின் உருஎழுதி உருகிய கோவலன்; இம்மாலையைக் கண்டதும் மதிமயங்கினன். உடனே கண்ணகியின் தீராக் காதலைத் தினையளவேனும் எண்ணாது, பணத்தின் பெருமையால் தன் பண்பு பழிபோக; மாதவி மாலையை வாங்கினன். அத் தோழியுடனே அவள் மனைக்கு அக்கணமே சென்றான். நெய் பெய்தால் எழுந்த தீபோல் கண்ணகியிடைக் கனிந்த காதல், நீறு பூத்த நெருப்பு போல் கோவலன் உள்ளத்தில் உள்ளீடாயிற்று. தெளிந்த கருத்தில் அமையாக் கலை உள்ளம் படைத்தோர் இங்ஙனம் அறிவழிந்து வாழ்தல் இயற்கை போலும்.

ஞாயிறும் மறைந்தான். நிலமகள், நீள்நிலவெறிக்கும் நிறைமதியோன் எங்கே? எங்கே? என்று தேடினாள்.

**மாதவி மனையில் கோவலன்:** தேடியபொருள் கையகப்பட்டாற் போல் நிலமகள் கையில் திங்கள் திகழ்ந்தது. எங்கும் வெள்ளொளி பரந்தது. மாதவி மனைபுகுந்த கோவலன் முழுநிலாமுன்றிலே முல்லை மல்லிகை முடிவிலாது பரப்பிய பூம்படுக்கையில் மாதவியோடு மருவி இருந்தான். மந்தமாருதமும் மணங் கொண்டு மெல்ல வீசியது. மாதவியின் மணியாடையின் மேல் செறிந்த செம்பவளக்கோவையும் அசைந்தது. இருவரும் இன்ப இணைப்பில் இறுதி காணாது நின்றனர். பொழுதுபுலர்ந்தது. நிற்க:

பெருந்தண் வாழ்க்கையில் பொருந்திப் பெருகி வாழ்ந்த கண்ணகி, கோவலனது கொடுஞ் செய்கையால் களைகண் காணாது கலங்கி இருந்தாள் இல்லறம் இடர்ப்பட்டதே என்று இரங்கி நின்றாள். கலக்கமும் துன்பமும் கலந்த நிலையால் அவளுடைய அழகிய கால்கள் சிலம்பைத் துறந்தன. இடை, மேகலையை வெறுத்தது. காதுகள் குழைகளை விட்டெறிந்தன. கண்கள் மையைக் கடிந்தன. மங்கல அணிதவிர மற்ற அணிகளை மறந்திருந்தாள். நிலா முற்றத்தை நிந்தித்தாள், தென்றலும் நிலவும் தன் மாளிகையில் மருவாதபடி சாளரங்களைச் சாடி அடைத்தாள். முத்துப் போன்ற பற்களின் முறுவலுக்கும் இடமில்லாமற் போயிற்று; ஆ! என்னே அவள் நிலை.

**கோவலன் மனையில் கண்ணகி:**

கோவலனுடைய தாய்க்கும் தந்தைக்கும் இது பெருங் கவலை விளைவித்தது. அவர்கள் இருவரும் கண்ணகியின் நிலையை அறிந்து வருந்தினர். ஆயினும் கண்ணகி, அவர்கள் எதிரே அவலம் உறாதவள் போல் உலாவினாள். மாமியும் மாமனும் அவளை மருவி, அன்பு உள்ளத்தால் அருள் அமைந்த மொழிகொண்டு தேற்றும் போது, அவள் புன் முறுவலோடு தோன்ற முயன்றாள். இவ்வாறு மாமன் மாமியர்க் கெதிரே பொய் முறுவல் பூத்துக், கணவனுடைய கருத்தற்ற செய்கையை மறைத்து, அவர்களுடைய கவலையையும் குறைக்க அருள் வழியில் நின்ற கண்ணகி, தனிமையில் தன் நிலை தாங்காது தாரை தாரையாகக் கண்ணீர் விட்டுக் கலங்கினாள். இவ்வாறு பல ஆண்டுகள் கழிந்தன.

இவ்வாறு இறுதிகாணா இன்னலில் இயைந்த கண்ணகிக்குத் "தேவந்தி" என்ற தோழி ஒருத்தி இருந்தாள். அவள் நாள்தோறும் சாத்தன் கோயிலில் வழிபாடு செய்து கொண்டிருந்தாள். கண்ணகியின் துயரை அறிந்தவள் ஆதலின், ஒருநாள் கண்ணகிக்காக அறுகும் சிறு பூளையும் நெல்லோடு தூவி அக்கால வழக்கப்படி வழிபட்டுக் கண்ணகி வீட்டுக்குச் சென்றாள்; "கண்ணகி! உனக்காக இன்று நான் வழிபாடு செய்து வந்தேன்; உன் துயர் தீரும்; உன் கணவன் உன்னை அடைவான்" என்றாள்.

**கண்ணகியின் கடுந்தவம்:**

அது கேட்ட கண்ணகி "உன் வாழ்த்தினுல் பெறக் கூடும்; ஆயினும் என்நெஞ்சு ஐயுறுகின்றது. தோழி! நான் கண்டகனவும் அப்படிப்பட்டது; என் கணவர் என்கையைப் பற்றிச் செல்ல நாங்கள் இருவரும் எங்கோ ஒரு பெரிய நகரத் திற் சேர்ந்தோம். அந்த ஊரில் அடாத அவச் சொல் ஒன்றை அவ்வூரார் எங்கள்மேல் சுமத்தினர்; அதனுல் அந்த அரசர்க்கும் ஊர்க்கும் கேடு நேர்ந்தது" என்ருள். உடனே தேவந்தி அவளை நோக்கி, "தோழி! நீ கணவரால் வெறுக் கப்பட்ட மனைவி அல்லை. ஏதோ காரணத்தால் சில ஆண்டு களாக உன்னை மறந்து வாழ்கிருர் உன் கணவர். அவர் உன் அன்பை அழித்து அகன்ருர் இல்லை முற்பிறப்பில் உன் கணவருக்கு ஆற்றுங் கடமைகளில் ஒன்றை ஆற்ருது தவறவிட்டாய் போலும்; அதனுல் தான் இந்தப் பிறப்பில் கணவனைப் பிரிந்து வாழவேண்டி வந்தது. அந்தக் குற்றம் இனி அகலக் காவிரியாறு கலக்கும் கடல்முகத்தில் நெய்தலங் கானலில் சந்திரகுண்டம் சூரியகுண்டம் என்னும் துறைகள் உள்ளன. அவற்றில் நீ முழுகிக் காமன் கோயிலைத் தொழ வேண்டும்; அவ்வாறு வணங்கும் பெண்கள் இம்மையில் கணவரைப் பிரியாமல் இனிது இருப்பார்கள்; நாம் ஒருநாள் அங்கே போய் அந்தத் துறையில் மூழ்கிவருவோம்" என்ருள்.

தோழியின் சொல்லைக் கேட்ட கண்ணகி "அது தக்கது அன்று" என்று சொல்லி வாளா இருந்தாள். கற்புடைய பெண்களுக்குக் கணவரைத் தவிர வேறு தெய்வங்களைத் தொழுதல் ஆகாது என்ற பழந்தமிழ் மரபை உணர்ந்த நெஞ்சினளாய் அவ்வாறு கூறி உடன்படாது இருந்தகண் ணகியாரின் வாழ்வு என்னே! தமிழ்வாழ்வு என்னே !!

## 4. இந்திர விழாவும் இன்ப முறிவும்.

இஃது இவ்வாருக, காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திர னுக்குத் திருவிழாக் கொண்டாடும் நன்னுள் வந்தது. அகத் தியரின் ஆணைப்படி தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் காலம் முதல் வழி வழியாகச் சோழமன்னர் இந்திரனுக்குத் திரு விழா நடத்தி வந்தனர். இத்திருவிழாவினுல் அரசுவாழ் வுறும்; இவ்விழாவை மறுத்தால் அது கேடுறும் என்று அக்காலத்தவர் நம்பினர். இவ்விழா இருபத்தெட்டு நாட்கள் நடைபெறும். மக்கள் இந்திரன் கோயிலுக்குக் காப்புக்கட்டி, வச்சிரக் கோட்டத்தில் உள்ள மங்கல முரசை மதயானையின்

**இந்திர விழா:**

மத்தகத்தில் ஏற்றி, ஐராவதம் இருக்கும் கோவிலில் விழாவின் முதலும் முடிவுஞ் சாற்றுவர். கற்பகக் கோட்டத்தினுள்ள மங்கல நெடுங் கொடியை வானுற உயர்த்துவர். வீதிகள் தோறும் அட்டமங்கலம் பொறித்து மகர தோரணங்கள் மாலைவடிவாகத் தூக்குவர். இத்தகு வீதிகளில் பூரணகும்பம், பாலிகை, பாவைவிளக்கு, பசும் பொற்கொடிகள், சுண்ணம் முதலியன ஆங்காங்கு அழகுற வைப்பர். அரசனது ஐம்பெருங் குழுவும், எண்பேர் ஆயமும், அரசகுமாரரும், வணிகர் குமாரரும், நால்வகை வீரரும் "மன்னன் வெற்றிகொள்க" என்று வாழ்த்தினர். இவ் வாழ்த்தொலியின் ஊடே உயர்ந்தோர் ஆயிரத்தெட்டு அரச மகுடத்தால் செய்த பொற்குடத்தில், பூந்தாது மலிந்த காவிரி முகத்தில் நன்னீர் கொணர்ந்து, மண்ணகம் மருள விண்ணகம் வியக்க, விண்ணவர் தலைவனாகிய இந்திரனுக்கு நீராட்டுவர். பின் நுதல் விழி நாட்டத்து இறையோன் கோயில், சேவற் கொடி உயர்த்திய செவ்வேள் கோயில், பலதேவன் கோயில், திருமால் கோயில், வாசன் கோயில் ஆகிய எல்லாச் சமயக் கோயில்களிலும் நலன் நலத்த நல்லோர் நான் மறை வழக்கின் படி நல்விழவு செய்தனர். இவ்வாறு எல்லா மதங்களின் ஒற்றுமைக்கும், சமயவளர்ச்சிக்கும், கலைவளத்திற்கும், பொதுமை உணர்ச்சிக்கும் உறைவிடமாய் இந்திர விழா அமைந்து நின்றது.

இத்தகைய நீர்மை இயைந்த இந்திர விழாவில் மாதவியும் கோவலனும் ஊடியும் கூடியும் மகிழ்ந்தனர். திருநாள் முடிந்த மறுநாள் அமாவாசை நாளாய் அமைந்திருந்தமையால் பூம்புகார் மக்களெல்லோரும் நீராடும் பொருட்டுக் கடற்கரைக்கு விரைந்து சென்றார்கள். மடலவிழ் தாழையும் மகிழ்வினிய புன்னையும் பூத்த நெய்தல் நிலத்தின் கடலாடலைக் காணவிரும்பி மாதவி கோவலனுடன் அதிகாலையிற் புறப்பட்டாள்.

**கடலாடல் காணல்:**

காலைச்சங்கு முழங்குகின்றது. கோழி கூவுகின்றது. புட்கள் விழித்தெழுந்து பாடுகின்றன. இவ்வமயத்தில் கொற்றக்கோவலன் குதிரையேறினான். மான்விழி மாதவி குதிரை பூட்டிய தேரில் ஏறினாள். இருவரும் பட்டினப் பாக்கத்தில் பரந்து கிடந்த கடை வீதிகளைத் தாண்டி, கடல் வளத்தினால் செல்வச் செழிப்புற்றிருந்த மருவூர்ப் பாக்கத்து

நகர வீதிகளின் நடுவே சென்று, வெண்மணல் பரவிய அலைவாயிலில் வரிசை வரிசையாகப் பரதேசமக்கள் வாழும் சேரிகளைக்கண்டு, காவிரியின் கடலாடுங் கன்னிய இடத்தை அடைந்தனர். அங்கு புன்னை நிழலில் புதுமணற் பரப்பில் சித்திரத்திரை கட்டி, மாமலர் நெடுங்கண் மாதவி, கோநிகர் கோவலனுடன் கொள்கைப்படி கூடியிருந்தாள்.

**கானல் வரியால் கருத்தழிதல்:**

இவ்வாறு இருக்கையில் மாதவி தன் தோழியாகிய "வசந்தமாலை" கையினின்றும் யாழை வாங்கி, அதனை முறைப்படி திருத்திக் கோவலன் கையிற் கொடுத்தாள். கோவலனும் மாதவி மனம் மகிழக் கானல்வரி பாடத்தொடங்கினான். கோவலன் பாடிய பாக்கள் அகப்பொருளியலில் களவுத் துறையில் தலைமகள் கூறிய மொழிகளாயிருந்தமையால், கோவலன் தன்மேல் அன்பிலாது வேறொரு காதலியைக்கருதி மயங்கினான் என்று மாதவி எண்ணினாள். ஆயினும், அக்கருத்தை வெளிப்படுத்தாமல் விதி வழிப்பட்டுத் தனக்கும் வேறொரு குறிப்பு உண்டு; வேறோர் காதலன் மேல் ஆசையுண்டு; என்று பதிலுக்குப் பதில் யாழை வாங்கிக் கானல் வரியை, நிலத்தெய்வம் வியப்பெய்த, நீள் நிலத்தோர் மனம் நிறைய, குரலும் விரலும் ஒன்ற, மாதவி பாடினாள். அது கேட்ட கோவலன், யான் கானல் வரி பாடினேன். தானும் பாடுவதாக யாழை வாங்கினாள். அதில் காதல் கறைபட-இன்பம் முறிவுறப் பலமாய்ப் பொய்களைக்கூட்டி இந்த மாயத்தாள் பாடினாள்; ஆ! என்று எண்ணியபோது, அறப்பத்தினி கண்ணகியின் கன்னியழகைக் கண்டான். "என்னே! என் கண் மயக்கம்; பொழுது போயிற்று" என்று எழுந்தான்; எழுந்து ஏவலருடன் கண்ணகி மனையை நோக்கிக் கடிது சென்றான். கடற்கரையில் காதலனைக் கானல் வரியால் கையிழந்த கணிகை மாதவி, தன் பாட்டொலி நிறுத்தி வண்டியிலேறி, தன் தோழியோடு தன்மனை புகுந்தாள். புகுந்தவள் வேனிற் காலமாதலின் அதற்குரிய வானுற உயர்ந்த மேனிலையில் நிலா முற்றத்தே சென்று, யாழைக் கையில் எடுத்துக் கண்டத்தாற் பாடி அது மயங்கி, சென்று யாழாற் பாடலுற்று அதுவும் மயங்கிப் பின் காமராசனாணையாலே கோவலற்குத் திருமுகம் விடுப்ப எண்ணி, பித்திகை (சிறு செண்பகம்) யின் முகையை எழுத்தாணியாகக் கொண்டு அதைச் செம்

பஞ்சுக் குழம்பில் தோய்த்து உதறி, முதிர்ந்த வெள்ளைத் தாழை மடலில் "இனிய இளவேனிலான் உயிர்களையெல்லாம், அவை மகிழும் துணைகளுடன் சேர்க்கின்றான். அந்திப் போதில் காதல் நோய் மலர, அதில் தோன்றிய திங்கட் செல்வனும் நேர்மையானவனுமல்லன். கூடினோர் இடையே ஊடினாலும், பிரிந்தவர் துணைகளை மறந்தாலும் மன்மதன் மணமுள்ள மலரம்புகளால் அவர் உயிரைக் கொள்வான். இது அவனுக்குப் புதிதல்ல. இதை நீர் அறிவீராக"

"மன்னுயிரெல்லா மகிழ்துணை புணர்க்கும்
இன்னிள வேனில் இளவரசாளன்
அந்திப்போதகத் தரும்பிடர்த் தோன்றிய
திங்கட் செல்வனுஞ் செவ்வியனல்லன்
புணர்ந்த மாக்கள் பொழுதிடைப்படுப்பினும்
தணர்ந்த மாக்கள் தந்துணை மறப்பினும்
நறும்பூவாளியின் நல்லுயிர் கோடல்
இறும்பூதன்று இஃது அறிந்தீமின்.';

என்று சொல்லிச் சொல்லி எழுதி மாதவி, சண்பகம், பச்சிலை, கருமுகை, வெண்பூ, மல்லிகை, செழுங்கழுநீர் ஆகியவற்றால் அடர்த்தியான ஒரு மாலை கட்டிக் காதற் பனுவலை அதனுள் வைத்து, தோழி "வசந்தமாலை" யிடம் மாலையைக் கொடுத்துக் கோவலனை அழைத்து வா எனப்பணித்தாள். அவ்வாறே தோழியும் கோவலனுக்கு அளித்தாள். கோவலன் மாதவியை வைது மாலையை மறுத்தான். வாடிய வதனத்துடன் வசந்தமாலை மாதவியிடம் விரைந்து சென்று நிகழ்ந்ததைச் சொன்னாள். மாதவியும் "கோவலனை மாலை வாராளுயினும் காலை வருவான்" என்று சொல்லி இமை பொருந்தாமல் இருந்து வருந்தினாள்.

## 5. மனம் நொந்த கோவலன் மதுரை நோக்கல்.

கணவனே அல்லாது பிற தெய்வங்களைக் கருத்திற் கொள்ளாத கண்ணகி மங்கல அணியோடு மனம் நொந்து வாழும்போது, ஒருநாள் வேலைக்காரி வந்து,

**கோவலன் வரவு:** "அம்மா! காவலன் போலும் நம் கோவலர் இதோ கடைவாயிலில் வருகின்றார்" என்ற எழில் மிகு செய்தியை எடுத்துச்சொன்னாள். கோவலன் வந்தான்; பாடமை படுக்கை அறையில் புகுந்தான்; கண்ணகியின் வாடிய மேனியும், வருந்திய உள்ளமும் கண்டான்; "கண்ணே பொய்க்கோலம் புணர்ந்து வஞ்சிக்கும் விலைமக

ளுடன் கூடிக் களியாட்டயர்ந்து, எல்லையில் குலப்பொருட் குன்றெல்லாந் தொலைத்தேன்; வறுமையுற்று நாணுகின்றேன்; வறியனுனேன், என்வினை; என்னை நாணச் செய்கின்றது" என்று வருந்தினன்.

"சலம் புணர் கொள்கைச் சலதி ஆடிக்
குலந்தரு வான் பொருட் குன்றம் தொலைத்த
இலம்பாடு நாணுத்தரும் எனக்கு"

கோவலன் இவ்வாறு தன் குற்றம் உணர்ந்து நொந்து கூறியதைக்கேட்ட கண்ணகி சிறிதும் வருத்தக் குறிப்பு இல்லாமலே புன்முறுவல் காட்டி மலர்ந்த முகத்தோடு, "சிலம்புகள் உள்ளன அவற்றை எடுத்துக்கொள்ளுங்கள்" என்ருள். தன் காதலியின் கற்பையும், தான் அவளுக்குச் செய்த தீமைகளையும் கோவலன் நினைந்து நினைந்து நெஞ்சம் குழைந்து, "என் கண்மணி! இச்சிலம்பை விற்று, அப்பொருளையே மூலப் பொருளாகவைத்து, வாணிகஞ் செய்வேன்; அதில் இழந்த பொருள்கள் அனைத்தும் பெற்றுப் பெருமை பெறுவேன்; அதற்காக நான் அழகிய மதுரையை அணுக விரும்புகின்றேன்; நீயும் என்னுடன்வா; எழுந்திரு; சுடர் எழுமுன் வைகறையில் புறப்படலாம்" என்ருன்.

**வீடும் ஊரும் துறத்தல்:**

இவ்வாறு இரவு முழுவதும் இரங்கிய கோவலன், காரிருள் வானம் கண் விழிக்கு முன் ஊழ்வினை உருத்து உள்ளத்தை உந்த, வீடு வெளிக்கக் கண்ணகியுடன் வெளியேறி மதுரை வழியை நோக்கினுன். போகும் வழியில் இருவரும் அரவணையின் மீது அறிதுயில் கொண்ட அழகிய அழகர் கோயிலை வலம் செய்து, மெய்வகை யுணர்ந்த விழுமியோர் நிறைந்த சிலாதலத்தையும் தொழுது ஊர்வாயிலைத் தாண்டினர். அங்கே வசந்தச் சோலையைக் கண்டனர். அச்சோலையின் ஊடே நடந்து மதிற்புறங் கடந்து சென்றனர். காவிரியின் திருமுகத்துறைக்குச் செல்லும் தெருவழியே இரு புறமும் கனிச்சுமையால் தாழ்ந்த சோலை யூடு சென்று, திருமுகத்துறை வாயிலையும் கடந்து, காவிரி வடகரையில் அடர்ந்த சோலையில் காததூரம் நடந்து ஓர் இளமரச்சோலையை அடைந்தனர். அச்சோலையில் குளிர்ந்த நிழலில் இருந்து இளைப்பாறினர். அப்பொழுது கண்ணகி தனது இனிய மொழிகளால் "மதுரை மூதூர் எங்கிருக்கிறது" என்று தன் காதலனிடம் கேட்டாள். கோவலன்

மிகவும் மனம் வருந்தி "இதுவரையும் நாம் ஒரு காதவழி கடந்து விட்டோம். இன்னும் முப்பது காதம் இருக்கின்றன" என்று மொழிந்தான்.

**கவுந்தியடிகளைக் காணல்:**

அச்சோலையின் ஒருபால் "கவுந்தி" யடிகள் என்னும் அருகத சமயப் பெண் அவம்தரும் வாழ்வு விட்டுத் தவ வாழ்வை மேற்கொண்டிருந்தாள். அப் பெரியாரைக் காதலர் இருவரும் கண்டு கையெடுத்து வணங்கினர். அவர்களைக் கண்ட அடிகள் வியப்படைந்து, "அழகும் குலமும் ஒழுக்கமும் ஒருங்கே அமைந்த நீங்கள் இருவரும் துன்பத்தால் நலிந்தாரைப் போல நாடு விடவேண்டிய காரணம் என்ன? என்று கேட்டார். "அடிகளே! பொருள் பெறும் பொருட்டு மதுரை மாநகர்க்குச் செல்கின்றோம்" என்றான் கோவலன். இதைக்கேட்ட கவுந்தியடிகள் "ஐயோ! இன்னும் எவ்வளவோ காததூரம் போக வேண்டுமே! வழிகளோ வாள்போன்ற கற்களும், ஆணி போன்ற முட்களும் அமைந்தன வன்றோ. அவ்வழிகளில் இவளுடைய மெல்லிய அடிகள் எவ்வாறு நடக்கும்? இத்தகைய செலவு இனியராகிய உங்களுக்கு உகந்ததல்ல; போக வேண்டாம் என்று வேண்டினும் உங்கள் ஊழ் வினைப்பயன் யாதோ? அதை யார் அறிவார்!" என்று சொல்லி வருந்தினர். பின்னர் இருவரையும் பார்த்து, "நானும் மதுரையில் சென்று துறவிகளின் தூயவுரைகளைக் கேட்கும் ஆர்வமுடையேன். ஆகையால் உங்களுடன் சேர்ந்து வந்தால் எல்லோருக்கும் நல்லது" என்று மொழிந்தார். இந் நற்செய்தியைக் கேட்ட நல்லோர் இருவரும் மகிழ்ந்தனர். மகிழ்ந்த கோவலனிடம் கவுந்தியடிகள் மதுரைவழியின் துன்பங்களையெல்லாம் எடுத்துரைத்தார்.

**கவுந்தியடிகள் சொன்ன மதுரை வழி:**

நாம் போகின்ற வழியில் வெயிலின் கொடுமையையோ சொல்ல வேண்டியதில்லை. வெயிலுக்குப் பயந்து சோலை வழியே செல்வோமானால் அங்கு வள்ளிக்கிழங்கை அகழ்ந்து எடுத்த பெருங் குழிகளைச் செண்பக மரங்களினின்றும் உதிர்ந்த மலர்கள் நிறைந்து மறைத்திருக்கும். இதை உணராத மக்கள் அக்குழிகளில் வீழ்ந்து மீளாத்துன்பம் அடைவார்கள்.

ஒருவாறு இக்குழிகளை அறிந்து ஒதுங்கிச் செல்வோமானல் தணிந்த கிளைகளில் முற்றிப் பழுத்துத் தேன் சொட்டும் பலாப்பழங்கள் வழியைத்தடுக்கும். இதனையும் விலகிச்சென்றால் இஞ்சியும் மஞ்சளும் மயங்கிய தோட்டத்தில் செஞ்சுளைப் பலாவின் கொட்டைகள் காலில் உறுத்தி வருத்தும்.

இந் நிலப்பகுதியை விட்டு வயல்வழியைக் கைக்கொள்வோமானல் பூக்கள் மலிந்த குளத்து மீன் உண்பதற்கு நீர் நாய் வேட்கை மிகுந்து அங்கு மிங்கும் திரியும். காட்டிலுள்ள கரும்புகள் முற்றி வெடித்தலால் அவற்றின் தேன் மருங்கிலுள்ள நன்னீரோடு கலந்து நிற்கும். அன்றியும் வயல்களின் வரம்புகளில் குவளைப் பூக்களை உழவர்கள் பறித்து எறிந்திருப்பார்கள். அவ்வரம்பின் வழியே செல்லும்போது அதில் உள்ள பொறிவரி வண்டினங்களையும் கால்களால் மிதித்துச் செல்லவும் நேரும். அவ்வழியாற் செல்லாமல் நீர் வழிந்தோடும் கால்வாய்களின் வழியே செல்லின் அங்குள்ள நண்டும் நத்தையும் நறுக்கெனக் காலடியிற் பட்டு வீழும். இத்தகு வழிவருத்தங்களைக் கடந்தே நாம் மதுரைக்குப் போகவேண்டுமே ஒழிய வேறு வழியில்லை. ஆகவே இத்தகு தீமைகள் நம் செலவால் விளையாதபடி மிக விழிப்பாக நாம் செல்லவேண்டும். என்று கூறிப் பிச்சாபாத்திரமும், தோளிலிடும் உறியும், மயிற்பீலியும் எடுத்துக்கொண்டு கண்ணகி கோவலருடன் மெல்ல நடந்தார் கவுந்தியடிகள்.

## 6. நாடும் காடும் நடந்த காட்சி.

இவ்வாறு மூவரும் இன்னல் சிறிதும் நேராவண்ணம் செல்லுகையில் விண்மீன்கள் தாம் செல்லும் விதிவழி மாறிச் சென்றாலும் குடகுமலையுச்சியில் கடுமையான இடிமுழக்கம் செய்து கரும் முகில் மழைவளஞ் சுரத்தலால் காவிரி நீத்தம் கரைகடந்து பேரொலி செய்து ஓடிக் கடல் முகவாயை எதிர்க்கும். அங்ஙனம் ஒலித்தல்செய்து ஓடிய நீர், வயல்களிற் செந்நெல்லும் கரும்பும் செழித்து வளரச் செய்யும். இதற்கு வயல் வளம் வாய்ந்த பொய்கையில் தாமரை தழைத்து அடர்ந்திருக்கும். சம்பகக் கோழி, கனைகுரல்

**வழிக் காட்சிகள்:**

காரை. நீர்க்காக்கை முதலிய புள்ளினங்கள் வெற்றி வேந்தரின் போர்முனை போலத் தத்தமக்குரிய பல்வேறு குரல்களை எழுப்பும். சேறு தோய்ந்த மயிர் மூடிய உடலும், சிவந்த கண்ணும் உடைய எருமைகள் புரிக்கூட்டின் மீது தினவெடுத்த முதுகை உராய்தலால் மூழுக்கு விட்டு நெல் முதலிய உணவுப் பண்டங்கள் பாரெங்கும் பரவிக்கிடக்கும். இதைக்கண்ட களமரும் பள்ளரும் காரெருமையைக் கடியும் ஓதை எங்கும் மிகுக்கும். வடிகளைக் கண்ணும் வம்பு மொழியும் உடைய கடைச்சியர் வயல்களில் களையென முளைத்த மலர்களைப் பறித்து நாற்று முடிகளை நடுவர்; சேறுண்ட மேனியுடன் கள்ளுண்டு கண்டபடி பாடுவர். நெற் கதிருடன் அறுகம் புல்லும் குவளையும் சேர்த்துக் கட்டிய மாலையைக் கலப்பையிற் சூட்டி, கடவுளைத் தொழுது இருநிலம் பிளக்க இனிதாக ஏர்ப்பாட்டுப் பாடி உழவர் உழுவர். கதிர்களில் காளைகளை விட்டுச் சூடடித் து நெல்லை அளக்கும் முகவைப் பாட்டு, பன்னவயல் எங்கும்பரவி ஒலிக்கும். இத்தகு இனித்த வழிக்காட்சிகளைக் கண்டும் கேட்டும் மகிழ்ந்தனர். அப்பால் அந்தணர் இருக்கையைக் கண்டார்கள். அவர்கள் வளர்க்கும் அக்கினியின் புகை, அவர்தம் மாளிகையை மஞ்சு சூழ்ந்த மலைபோல் தோற்றுவிக்கிறது. இன்னும் இரப்போர் சுற்றத்தையும் இறையவன் கொற்றத்தையும் காத்து உழவுத்தொழிலால் உலகோர்க்கெல்லாம் உணவளிக்கும் வேளாளர் வாழ்ந்த விரிநிலப் பரப்பையும் கடந்து மூவரும் சென்றார்கள். இவ்வாறு மூவரும் ஊருக்கு ஊர் தங்கித் தங்கிச் சென்று ஒருநாள் திருவரங்கத்திற்கு வந்தனர்.

**அருக சமயச் சாரணர்:**

இவ்வாறு மெல்ல மெல்லச் செல்லும் போது தருமஞ் சாற்றும் அருகசமயச்சாரணர் ஒருவர் தோற்றினார். அவரைக் கண்ட அருந்தவக் கவுந்தியடிகள் முடியுற அடியில் வீழ்ந்து முறையாக வழிபாடு செய்தனர். அச்சாரணர் அடிகளைப் பார்த்து, "வினையின் பயன் வந்தே தீரும் என்றும், மக்கள் உடம்பு கடுங்காற்றுள்ள நெடுவெளியில் ஏற்றப்பட்ட ஒளி விளக்குப் போல் நில்லா தொழியும் என்றும், எண்ணருங் குணங்களையுடைய இறைவன் அருளிய மறையின் ஒளியைப் பெற்றால் அல்லது பிறவியாகிய சிறை

யினின்றும் வெளியேற முடியாதென்றும்" உண்மை மொழிகளை உள்ளங் கொள்ளக் கூறினர்.

இவ்வாறு இவ்வுறுதி மொழியைக் கேட்ட கவுந்தியடிகள் உச்சிமேற் கைகூப்பி "ஐயனே! இறைவன் திருமொழியைக் கேட்பதற்கு என் செவிதிறக்குமேயல்லலாமல் வேறொன்றிற்கும் திறக்க மாட்டாது. இறைவனது எண்ணிறந்த குணங்களை எடுத்து மொழிவதற்கல்லாமல் வேறொன்றிற்கும் என் நாவெழமாட்டாது. இறைவனது இணையடிகளைக் காண்பதற்குத் திறக்குமேயல்லாமல் என் கண் வேறொன்றிற்கும் திறக்கமாட்டாது. என் பயனற்ற அங்கங்கள் அறவாழி அந்தணனைத் தொழுதற்கல்லால் வேறொன்றிற்கும் பூமியில் பொருந்த மாட்டா. என்னிரு கரங்களும் இறைவனை வழிபடும் பொருட்டுக் குவிவதல்லால் வேறொருவர் பொருட்டுக் குவியமாட்டா. என் தலையானது மலர்மிசை நடந்த மலரடிக்குத் தாழ்வதல்லாது வேறொன்றிற்கும் தாழ்வடையாது. என் அகம் இறைவன் அருளிய மறைமொழியை நினைந்து நினைந்து குழைவதல்லால் வேறொரு மொழியை ஓதி உருகமாட்டாது. என்று இறைவனது திருவடிகளுக்குப் புகழ்மாலைபாடித் தொழுதார்.

**திருவரங்கமாலைப் பாடுதல்:**

இப்புகழ்மாலையைக் கேட்டு மகிழ்ந்த சாரணர் "கவுந்திக்குப் பாவநாசம் ஒழிக!" என்று வாழ்த்திவான் வழியே சென்றனர். மூவரும் பள்ளியோடத்தில் ஏறி, காவிரித் தென்கரை சேர்ந்து, ஒரு பூம் பொழிலில் இருந்தனர்.

அச் சோலையில் காமுகர் இருவர்வந்து கோவலன் கண்ணகியைக் கூர்ந்து நோக்கினர். அவர்களின் அழகில் அறிவு அழிந்த காமுகர்கள் கவுந்தியடிகளை அடைந்து, "அடிகளே! உம்முடன் இருக்கின்ற இவ்விருவரும் யாவர்" என்று கேட்டார்கள். அதற்கு அடிகள், "இவர் என் மக்கள்; வழிப்பயணத்தால் வருந்தி வந்துள்ளனர்; நீங்கள் அப்பால் செல்லுங்கள்" என்றார். அன்பும் அறமும் அறியாத அவர்கள் சிறிதும் ஆராயாமல், "இவர்கள் உம்மக்களாயின் உடன்பிறந்தவர்களாக வேண்டும்; உடன்பிறந்த ஆணும் பெண்ணும் இவ்வாறு காதலர்போல் கூடியிருப்பதும் உண்டோ? கற்றறிந்த நீர் இவ்வாறு கூறுகிறீரே" என்றார்கள்.

**கண்ணகியின் அருளுடைமை:**

இக்கடுஞ் சொல் கேட்டதும் கண்ணகி தன் செவிகளை மூடிக் கொண்டு கணவன் முன் நடுக்கமுற்றாள். கவுந்தியடிகள் காமுகரின் கடுஞ் சொல்லை வெறுத்தவராய், "முள் நிறைந்த காட்டில் முதுநரிகளாக இவர்கள் மாறுக!', எனச் சாபம் இட்டார். அந்தச்சாபத்தால் அவர்கள் நரிகளானதைக் கண்ணகியும் கோவலனும் அறியவில்லை. குள்ள நரிகளாய் ஊளையிடும் ஒலியைக் கேட்டபிறகே உணர்ந்தனர். உணர்ந்து நடுங்கினர்; "நெறியற்றவர்கள் தகாதன கூறினர்; அறியாமையால் அவ்வாறு செய்தனர் என்று உணர்ந்து அவர்களுக்காக இரக்கம் காட்டல் வேண்டும்; அவர்கள் செய்தபிழைக்காக இட்டசாபம் முடியும் காலம் அருளல் வேண்டும்" என்று கவுந்தியடிகளை வேண்டினர். அறியாமையாலே இழிபிறப்புற்ற இவர்கள் உறையூர் மதிற்புறத்தில் பன்னிரண்டு திங்கள் இவ்வாறு திரிந்து, துயருற்றபிறகு முன்னை மானிட வடிவம் பெறுக!" என்று சாபவிடை செய்தார் கவுந்தியடிகள். பிறகுமூவரும் வழி நடந்துமாலைப்பொழுதில் உறையூரின் கண்வந்துசேர்ந்தனர்.

உறையூரில் அசோகில் அமர்ந்த அறிவனை வணங்கும் அருகசமய இல்லறத்தார் வாழ்ந்த இடத்தில் இராப்பொழுதைக் கழித்தார்கள். பொழுது புலரு முன்னே கோழியூரை விட்டகன்று தென்திசையை நோக்கிச் சென்றார்கள். அப்பொழுது மாட மதுரையின் மன்னனை வாழ்த்திக்கொண்டு ஒரு மறையோன் அவ்வழியே வந்தான். கோவலன் அவனைப் பார்த்து, "ஐயனே! உமது ஊர்யாது? நீர்எங்கிருந்து வருகின்றீர்?" என்று கேட்க, அவன், நான் மாங்காடென்னும் ஊரிலுள்ளவன். வரும் பொருள் உரைக்கும் வன்மையுடையேன். காவிரிக்கரையில் திருவரங்கத்தில் ஆதிசேடன் மேல் அறிதுயில் கொள்ளும் அஞ்சனவண்ணனது அழகிய கோலத்தையும் தன் அழகிய கையில் ஆழியும் சங்கும் ஏந்தி, மணியாரத்தை மார்பில் பூண்டு, பொலம் பூவாடையில் பொலிந்து தோன்றும் நெடியோனது நின்ற கோலத்தையும் கண்டு மகிழும் பொருட்டு இந்நாட்டிற்கு வந்தேன். பாண்டியநாட்டின் மன்னனது பெருஞ்சிறப்பையும் அருஞ்செயல்களையும் என் கண் குளிரக் கண்டேன். ஆதலால் அவன் புகழை வாயாரவாழ்த்

தினேன்" என்று கூறினன். அதுகேட்ட கோவலர், "இம்மறையவன் மதுரைமாநகரிலிருந்து வருகின்றமையால் அவ்வூருக்குச் செல்ல நல்ல வழியைச் சொல்லுவான்" என்று துணிந்து அவனிடம் மதுரை மாநகர்க்கு வழி கேட்டான்.

**மதுரை வழிகள் மூன்று:**

மறையவன் கோவலனை நோக்கி, "ஐயா சூரியனுடைய வெம்மை சிறிதும் பொறுக்க முடியவில்லை. இவ்வெப்பத்தால் நிலம் பாலை நிலம் போலக்காண்கின்றது. இக்கொடிய வேனிற்காலத்தில் இக்காரிகையுடன் எப்படி வந்தீர்! கற்பாறையும், மணற்குன்றும், கண்ணை மயக்கும் கரடு முரடான குறுகிய வழிகளும் அமைந்த பாலையைத் தாண்டினல் கொடும்பாளூர், நெடுங்குளம் என்னும் இரு ஊர்களின் நடுவே ஓர் ஏரி தோன்றும். அந்த ஏரிக்கரையைக் கடந்து சென்றால் திரிசூலம் போல முப்பிரிவான வழி துலங்கும்.

வலது பக்கமாய்ப் பிரிந்து செல்லும் வழியே போனல் வெண்கடம்பும், வாழையும், மூங்கிலும் சரிந்து கிடக்க, குடி நீர் காணுது மான்கள் வேட்கையால் வருந்தும் காடுகளைக் காண்பீர். அதைத் தாண்டிச் சென்றால் மலை நெல்லும், முதிர்கரும்பும், செழித்த வரகும், உள்ளியும், மஞ்சளும், வாழையும், கமுகும், தெங்கும், மாவும், பலாவும் சூழ்ந்தோங்கும் தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும். அம்மலையை வலங்கொண்டு சென்றால் நீங்கள் மதுரையை அடையலாம்.

இனி இடதுபுறம் சென்றால் வண்டுகள் இசைபாடும் தடாகங்களும், வயல்களும், பூஞ்சோலைகளும், இடையிடையே பல அருஞ்சுரங்கள் மேவிய காடுகளுங் காண்பீர். அவற்றைத் தாண்டினல் அழகர்மலையை அடையலாம். அக்குன்றத்தில் பூமிக்குள்ளே செல்லும் ஒரு வழியுண்டு. அவ்வழியே சென்றால் மூன்று தடாகங்கள் விளங்கித் தோன்றும் அதில் முதற்தடாகமான புண்ணிய சரவணத்தில் முழுகினல் இந்திரன் இயற்றிய நூலின் நுண்மை புலப்படும். மற்றொன்றாகிய பவகாரணிப் பொய்கையில் மூழ்கினல் இப்பிறப்புக்குக் காரணமாகிய முற்பிறப்புணர்ச்சி உண்டாகும். மூன்றாவதாகிய இட்டசித்தி குளத்தில் குதித்தெழுந்தால் எண்ணிய கருமம் எண்ணியவாறு எளிதிற்பெறலாம். இப்பாதாள வழியிற் செல்ல விருப்பமில்லையாயின் அத்திருமலை

யின்கண் வீற்றிருக்கும் திருமாலைத் தொழுது அம்மலையை மும்முறைவலம் செய்தால் ஒரு தேவதை முன்னல் தோன்றி இம்மை மறுமை இன்பங்கள் எவை என்று கேட்கும். அவ் வினவிற்குப் பதிலுரைத்தால் ஓர்கதவைத் திறந்து நல்ல வழியைக் காட்டும். அவ்வழியே சென்றால் இரண்டு கதவை உடையதோர் வாயில் காணப்படும். அவ்வாயிலுக் கப்பால் பூங்கொடிபோன்ற ஒருமாது தோன்றி ஈறில்லாத இன்பம் யாதென்று கேட்கும். அதற்குச் சரியான மாற்றம் உரைத் தால் முன்னே கூறிய மூன்று பொய்கையில் கொண்டு சேர்த்து அவற்றின் தன்மையை உரைத்துப் போகும். இவ்வினவிற்கு மறுமொழி சொல்ல இயலாமற் போயினும் யாதொருதுன்பமுஞ் செய்யாது வழியிற்போக விடும். அப் பொய்கைகளில் ஐந்தெழுத்தையாயினும் எட்டெழுத்தை யாயினும் அன்போடு ஒரு முறை ஓதிப் பொருளுணரின் உடனே அருந்தவத்தினருக்கும் அரிதான பயன் வந்தடை யும். இப்பொய்கையின் பயனை விரும்பாமல் மலைமீது நின்ற திருமால் திருவடிகளை நினைந்தால் அப்பெருமான் திருவடி நிழல் அடையலாம் என்னும் உறுதியுடன் மாண்புடை மதுரையைச் சேரலாம்.

மேற்கூறிய இருவழிகளிலும் செல்லாமல் நடுவழியே சென்றால் அதுமிக நல்லவழியாகத் தோன்றும். அதன் கண் இனியசோலை சூழ்ந்த ஊர்களும், ஊர்களுக்கு மத்தியி லுள்ள காடுகளும் கடந்து சென்றால் வழியிலோர் தெய்வம் குறுக்கிடும். அது வழிச்செல்வோரைத் துன்புறுத்தித் தடுக் கும் தன்மையதன்று. ஆனல் நயவஞ்சகத்தால் தடுக்கும். அத்தெய்வத்தைத் தப்பிவிட்டால் மதுரைமாநகரத்தை எளிதிலடையலாம்'' என்று சொல்லி முடித்தான்.

கவுந்தியடிகளும் இதனைக் கவனமாய்க் கேட்டு இம் மூன்று வழிகளில் எங்களுக்கு ஏற்றவழியே நாங்கள் செல்கி ரேம் என்று கூறி மறையவனிடம் விடை பெற்றுக் கொண்டு மேற்சொல்லிய மத்திய வழியாக மூவரும் சென்ற னர்.

மறுநாள் மூவரும் முன்னர் அந்தணன் சொன்ன முக்கிளைப் பாதையில் நடுவழியையே விரும்பிச் சென்றனர்.

**மயக்குந் தெய்வம்:** கடைச் செலவால் சோர்ந்து கவுந்தியும் கருந்தடங் கண்ணியான கண்ணகியும் வழியில் ஒருபுறம் தங்கினர். அப்போது கோவலன் நீர் வேட்கையால் ஒரு பொய்கையை நாடி அதன் கரையில் நின்றான். அங்கே முன் வேதியன் விண்ட வன தேவதை கோவலன் மீது ஆவலுற்று மாதவியை நயந்த இவன் நம்மையும் நயப்பான் என்றெண்ணி வசந்தமாலை உருக்கொண்டு முன்னே தோன்றி, பொய்க்கண்ணீர் உகுத்து ஐயனே! மாதவியின் திருமுகத்தை நீர் மறுத்த செய்தி அவள் கேட்டு மனங்கலங்கித் துன்புற்று என் முன்னே மயங்கி வீழ்ந்தாள். தன் மார்பின் முத்தாரத்தை இழுத்து முத்துக்களைச் சிதறிவிட்டாள். நின் சொல்லின் வழுவால் போலும் என்பிரிவை நீட்டினான் என்று என்னையும் எற்றித் தள்ளினாள். எதிரில் வந்தவர்கள் நீங்கள் மதுரைக்குச் செல்வதாகக் கூறினார்கள். உன்னைத் தேடிவந்தேன்; தனித்துத்துயருற்றேன், ஐயனே! என்னை ஆதரிக்க வேண்டும் என்றுகூறியது.

"வன்காட்டில் மயக்குந் தெய்வம் உண்டென்று வியக்கத்தக்க வேதியன் சொன்னானல்லவா? இதுவே அது" என்று அதன்வஞ்சத்தை நீக்கும் அந்தரி மந்திரத்தைச் செபித்தான் கோவலன். தேவதை அஞ்சியது. "நான்வன தெய்வம்; நின்னை நச்சியே மயக்கம் செய்தேன். நான்செய்த இப்பிழையைப் பொறுப்பதோடு இச்செய்தியை மாதவப் பெரியோராகிய கவுந்தியாரிடமும் சொல்லலாகாது" என்று வேண்டி வணங்கிச் சென்றது. பின்னர் கோவலன் தாமரையிலையில் தண்ணீர் தாங்கிக் கொண்டு வந்து தையலார் கண்ணகியின் தாகத்தைத் தணித்தான்.

அப்பால் வேகும் வெய்யிலில் கண்ணகி மெய்சோர்ந்து, அடி கொப்புளிக்கத் துன்புற்றாள். அப்பாலை வனத்தில் ஒரு

**காளிகோயிலில் களையாறல்:** பூம் பொழில் தென்பட்டது. அதில் குரவம், கடம்பு, கோங்கம், வேங்கை ஆகிய மரங்கள் அடர்ந்து மணம் வீசின. அச்சோலையில் ஒரு காளிகோயில் இருந்தது. அதில் மூவரும் வெய்யிலுக்குத் தங்கினர். இவ்வாறு இளைப்பாறியிருக்

கையில், வில்லும் கையுமாக மறவர்குடியில் பிறந்த சாலினி என்னும் மறப்பெண் தெய்வமுற்று ஆவேசமாகி ஊர்நடுவில் உள்ள மன்றத்தில் அடிபெயர்த்து ஆடத்தொடங்கினள். அங்கு நிறைந்த குலப்பெண்களைப் பார்த்து, "தேவிக்கு முன்பு சொல்லிய பலியைக் கொடாது விட்டபடியால் மறக்குடி தாழ்ந்தது. மறவரும் மறங்குன்றி விட்டனர். பசுத் தொழுவங்கள் பாழ்பட்டன. பகைவர் ஊரில் பசுவளம் பெருகியது. மறவர்களின் வழிப்பறிவளம், வளம்படவில்லை. நீங்கள் சிறப்புற வாழவிரும்பினல் தேவிக்குச் செலுத்த வேண்டிய கடனை விரைவில் செலுத்துங்கள்." என்று சாலினி சொன்னள்.

**கொற்றவை வழிபாடும் கண்ணகி அடக்கமும்:**

இதைக் கேட்டமறவர் தெய்வமுற்ற அம்மாதின் சடையை முடித்து, பன்றிக்கொம்பைப் பிறையாகச் சாத்தி, புலிப்பல்லைத்தாலியாகக் கட்டி, வரியும் புள்ளியும் உடையபுலித்தோலை ஆடையாக அணிந்து கருவில்லைக் கையில் கொடுத்து, முறுக்குக் கொம்பை உடைய ஆட்டின் மேலேற்றி, கானக்கோழியும், நீலமயிலும், பந்தும், கழங்கும் காணிக்கையாகக் கொடுத்து, வண்ணமும், சுண்ணமும், பூவும், புகையும், சோறும், எள்ளுருண்டையும் கொண்டு ஏவலாளர் பின்னேவர; கொட்டு பாறையும், சின்னமும், மணியும், குழலும், கொம்பும் ஒன்ருய் ஒலிப்ப; தெய்வத்தைத் தொழுது வணங்கினர்கள். அம்மாது மறுபடியும் ஆவேசம்உற்று கண்ணகியைப் பார்த்து இவளோ,

"கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென் தமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய திருமா மணி."

என்ருள். தெய்வம் ஏறிய நிலையிலே அவள் இவ்வாறு சொன்ன சொற்களைக் கேட்டகண்ணகி, "இவள் ஏதோ மயங்கிச் சொல்கிருள்" என்று கணவனுடைய முதுகுப் புறமாய் ஒதுங்கிப் புன்முறுவல் கொண்டு அடக்கத்தின் உறைவிடமாய் நின்ருள். தனது நற்குணம் தனக்குத் தெரியாது அக்குணத்தில் வாழும் கண்ணகியின் அடக்கம் என்னே.

இவ்வாறு கொற்றவை வழிபாடு முடிந்தவுடன் கவுந்தியடிகளும் கோவலனும் மீண்டும் பயணத்தைப் பற்றி எண்ணினர். "இக்கடுமையான வேனில் வெப்பத்தைக் கண்ணகி பொறுக்கமாட்டாள். பரல்கற்கள் நிறைந்த காட்டுவழியில் இவளுடைய கால்கள் பொருந்தவில்லை. இது செங்கோல் கொண்டு பாண்டியர் காக்கும் நாடு. இங்கே கரடி, புலி, பாம்பு முதலியவற்றின் கொடுமையில்லை என்று எங்கும் புகழ் பரவியிருக்கிறது. ஆகையால் பகலில் வெயிலில் நடந்து செல்வதைவிட, இரவில் நிலவொளியில் நடந்து செல்வதில் தீங்கு ஒன்றும் இருக்காது" என்று எண்ணிக் கதிரவன் மறைவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். பாண்டியர் குலத்தின் முதல்வனாகிய சந்திரன் மெல்லத் தோன்றிப் பால் போன்ற நிலவொளியைப் பரப்பினான். தென்றலும் மெல்ல அசைந்து வந்தது. "முத்துமாலையும் சந்தனக் குழம்பும் கழுநீர் மாலையும் சிறுபசுந்தளிரும் கண்ணகியைச் சேராமல் விட்டு நீங்கியிருக்கின்றன, திங்களே! நீ மட்டும் உன்நிலவொளியைத் தென்றல் காற்றோடு அவள்மேல் சொரிய விரும்புகிறாயே" என்று நிலமகள் வருந்திப் பெருமூச்சுவிட்டு அடங்கியதுபோல் அமைதி நிலவியது. கோவலன் கண்ணகியின் கையைத் தன்தோள் மேல் வைத்துக் கொண்டு, "இந்தக் காட்டில் புலிதிரியும்; கோட்டான் கூவும்; கரடி முழக்கம் செய்யும்; இவற்றைக் கேட்கும் போதெல்லாம் நீ அஞ்சிநடுங்காமல் வா" என்று சொல்லிக் கொண்டு நடந்தான்; வழியெல்லாம் கவுந்தியடிகளின் கருத்துரைகளைக் கேட்டுக் கொண்டு வழித்தொலைவையும் மறந்து சென்றான்.

**நிலாப் பயணம்:**

காலை புலர்ந்தது, கதிர் வருகிறது என்று, காட்டுக்கோழிகள் கூவியறிவித்தன. மூவரும் பார்ப்பனச் சேரியை அடைந்தனர். அங்கு கோயிற்புறத்தைச் சேர்ந்திருந்தனர். கோவலன் கவுந்தியையும் காதலியையும் காவல் சூழ்ந்த இடத்தில் அமர்த்தினான். பிறகு காலைக் கடன் கழிக்க நெடு வழி நடந்து ஒரு நீர்த்தடாகத்தை அடைந்தான்.

அப்பொழுது மாதவி கொடுத்த முடங்கலுடன் கோவலனைத் தேடிப் பலவிடமும் சுற்றித்திரிந்து வந்த கோசிகனென்னும் வேதியன், கோவலனைக் கண்டும், துயர் மிகுதியால் அவன் வடிவும் நிறமும் வேறுபட்டிருத்தலால் ஐயுற்றவனாய், அது தெளிதற்கு ஆங்கிருந்த ஓர் குருக்கத்திப் பந்தரை அடைந்து, "ஓ! மாதவி! கோவலன் பிரியக் கொடுந் துயரெய்திய மாமலர் நெடுங்கண் மாதவி போன்று இவ் அருந்திறல் வேனிற்கு மலர்களை அளித்து வருந்தினை போலும்" என்று கூறிநின்றான். அதனைச் செவியுற்ற,

**மாதவி செய்தி:**

கோவலன் "நீ இங்கே கூறிய கூற்றின் பொருள் யாது" எனவினவினான். வேதியன் ஐயத்தினீங்கித் தெளிந்து, அவனைச் சார்ந்து, கோவலனை நோக்கி, "ஐயனே! உம்மைக் காணாத தந்தையும் தாயும் அருமணி இழந்த நாகம் போல் ஆறாத்துயருற்று வருந்துகின்றார்கள்; உமது நெருங்கிய சுற்றத்தாரெல்லாம் உயிரிழந்த உடல் போலச் செயலற்றுத் துயர்க்கடலில் அழுந்தி யிருக்கின்றார்கள். உமது தந்தையார் எல்லாத் திசைகளிலும் ஏவலாளரைப் போக்கி உம் இருப்பிடம் அறிந்துவர அனுப்பியுள்ளார். இராமன் நீங்கிய அயோத்திபோலப் புகார் பெருந்துயர் அடைந்தது. மாதவி மேனி பசந்து நெடுநிலை மாடத்தின் இடைநிலையில் உள்ள படுக்கையில் நின்னை நினைந்து வருந்தி வீழ்ந்தாள். அவளது நிலை கேட்டு அங்குச் செல்ல, அவள் "எனக்குற்ற துயரைத் தீர்ப்பாயாக" என்று தனது மலர்க்கையால் இந்த ஓலையெழுதி "என் கண்மணி அனைய கோவலருக்கு இதைக்காட்டு" என்று தந்தாள். "இந்த ஓலை கொண்டு உன்னைக் காணாமல் பல ஊர்கள் சென்றலைந்தேன்" என்று சொல்லிப் பிரிவுத்துயரால் உள்ளமழிந்து வருந்தும் போதார் கூந்தல் மாதவியின் ஓலையைக் கோவலன் மலர்க்கையில் நீட்டினான்.

ஓலை மாடிப்புறத்து மாதவி கூந்தலால் இட்ட முத்திரை நெய்மணம் அடித்தது. அது முன்பு கோவலன் மாதவியினிடத்து நுகர்ந்த மணமேயாம். அது பழைய நினைப்பையுணர்த்தியது. அதைஉடனே உடைக்காமல் பிடித்திருந்து, பிறகு அவன் ஓலையைப் பிரித்துப் படித்தான். "தேவரீர் திருவடிகளுக்குத் திக்கு நோக்கி வீழ்ந்து வணங்கினேன்.

பொய்மை நீங்கிய மெய்க்காட்சியை உடைய பெரியோய்! திருத்தமற்ற சொல்லாயினும், இப்பேதை யுரைப்பதை மனத்திற் கொள்ள வேண்டும். தங்கள் பெற்றோர் மூப் பெய்தினர். அவர்களுக்கு உடனிருந்து பணிவிடை செய்யாமல் உயர்குலக் கற்பரசியான மனைவியுடன் இருட்டோடு ஊர்விட்டுச் சென்றதேன்? ஐய! அப்படி ஊரைவிட்டுச் செல்லும்படி என்ன குற்றம் நேர்ந்தது? நான் செய்த பிழையாது? அதை அறியாமல் என் மனம் வருந்துகிறது. என் துயரைத் தீர்க்கவேண்டும்"

"அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனங் கொளல் வேண்டும்
குரவர் பணியன்றியும் குலப்பிறப் பாட்டியோடு
இரவிடை கழிதற்கு என்பிழை யறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி!"

என்று மாதவி எழுதிய மொழிகளை உணர்ந்து "இது அவள் குற்றமன்று, என்குற்றமே" என்று மனமுருகி நடந்ததை யறிந்தான் கோவலன்; தளர்வு நீங்கினன். "அந்தண! இந்த ஓலையின் பொருள் எனது பெற்றோருக்கும் பொருந்தியிருக்கிறது. அடிகாள், உமது திக்கு நோக்கி விழுந்து வணங்கினேன். எனது வார்த்தையை மனங் கொள்ளல் வேண்டும்: நான் இரண்டு குற்றம் செய்தேன். ஒன்று, வயது வந்த காலத்தில் தங்கள் பணி செய்யாதது; மற்றொன்று, மனைவியுடன் இரவில் ஊர்விட்டகன்றது. என்பிழைப்பிற்காகவே, அதாவது வாணிப நோக்கத்துடனேயே இவ்வாறு புகாரைவிட்டு மதுரையை நோக்கினேன். எனது பிழையை அறியாமல் வருந்தும் உங்கள் நெஞ்சத்தை ஆற்றிக்கொள்ள வேண்டும். பொய்யற்ற உண்மையறிந்த பெரியோரான தந்தையே வணக்கம்" என்று எல்லாம் ஒத்திருப்பதால் அவர்களுக்கும் இந்த ஓலையையே காட்டுக. அவர் மலரடி தொழுதேன். உனது வருத்தத்தை விட்டு, எனது பெற்றோரின் நல்ல மனத்திற் பொருந்திய துன்பத்தைக் களைய விரைந்து செல்வாயாக" என்று வேதியனைச் செல்ல விடுத்து, தனது இடத்திற்குப் போனான் கோவலன். அங்கு கோவலன் தொலையாத பகற் பொழுதைக் கழிக்கும் பொருட்டு, அங்கு பாடிக்

கொண்டிருந்த பாணரோடு தானும் சேர்ந்து யாழைக் கையிலேற்று மிக இனிமையாகப் பாடினன். இன்னிசை முடிந்த பின்னர் மருங்கிருந்த மக்களிடம் "இன்னும் மதுரை மாநகர் எவ்வளவு தூரமிருக்கிறது" என்று கோவலன் கேட்டான். அதற்கு அவர்கள் "இதோ, மதுரைத் தென்றல் வீசுகின்றது. இன்னும் மதுரை மாநகர்க்கு வெகுதூரமில்லை" என்றூர்கள். அவ்வுரை கேட்டு ஒருவாறு ஆறுதல் அடைந்த மூவரும் வழக்கம்போல் இரவில் வழிநடந்து சென்றனர். மதுரையை அணுகினர். நகரத்தின் பல்வேறு ஒலியும் செவியில் விழத்தொடங்கியது.

## உ. மறைவினைக்கு உறவான மதுரை.

நகரத்தை அடைந்து விட்டோம் என்ற அகமகிழ்வோடு மேலும் மூவரும் நடந்தனர்;பலவகை மரங்களும்,செடிகளும், கொடிகளும், பூத்து விளங்கும் வைகையாற்றின் கரையை அடைந்தனர். மலர்கள் நிறையப் படிந்து நீரை மறைத்துச் செல்லும் ஆற்றின் காட்சி அவர்களின் கண்ணைக் கவர்ந்தது. வையை என்னும் பொய்யாக் குலக்கொடி கண்ணகிக்கு வரும் துன்பத்தை முன்னமே அறிந்து வருந்தி நறுமலரே ஆடையாகப் போர்த்துக் கண்ணீரை மறைத்து அடங்கியவள் போலத் தோன்றியது.

"புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி
தையற் குறுவது தானறிந் தனள் போல்
புண்ணிய நறுமலர் ஆடைபோர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கிப்
புனல்யா றன்றிது பூம்புனல் யாறென
அன்ன நடை மாதரும் ஐயனும் தொழுது..........."

இது புனல் ஓடும் ஆறு அன்று. பூம்புனல் ஓடும் ஆறு என்று சொல்லுமாறு அவ்வளவு மலர்கள் நீர்மேல் படிந்து மிதந்தன. அதை மூவரும் தொழுது போற்றினர். அங்கு

ஒரு பகுதியில் இருந்தமரப்புணையில் ஏறி ஆற்றைக் கடந்து தென்கரையை அடைந்தனர். காவற்காடு சூழ்ந்த அகழியைச் சுற்றிச் சென்றனர். அகழியில் மலர்ந்த குவளையும் ஆம்பலும், தாமரையும், கண்ணகிக்கும், கோவலனுக்கும், வரும் துயரத்தை அறிந்தவை போலத் தோன்றின. அந்தமலர்களில் வண்டுகள் ஒலித்த ஒலி, அவற்றின் துயர்க் குரலாய் விளங்கியது. துயரத்தால் கண்ணீர் விடுவனபோல் அவை தேனைச்சொரிந்தன. துயரத்தால் நடுங்குவன போல் காற்றடிக்க நடுங்கின. மதுரை நகரின் மதில்மேல் விளங்கிய கொடிகளும் "இந்தநகர்க்குள் வராதீர்கள்" என்று கையால் தடுத்துக் காட்டுபவை போல் அசைந்து ஆடின. இத்தகைய மதுரை மூதூரில் மூவரும் போந்து ஒரு புறஞ்சேரியை அடைந்தார்கள்.

காலைப் பொழுது புலர்ந்தது. புறஞ்சேரிப் பொழில்களிலும் மருதநிழல் மரங்களிலும் புட்கள் எழுந்து பாடுகின்றன. பொய்கைப்பூவும் முகையவிழ்ந்தது. ஆதித்தனை அனைவரும் கண்டு மகிழ்ந்தனர். கோயில்களிலும், கோவேந்தர் கோயில்களிலும் கோலமணிகள் கொற்றவெண்சங்குடன் முழங்கின. கவுந்தியடிகள் கொள்கைப்படி கடவுளைத் தியானித்தார். கோவலன் காலைக்கடன் கழித்துக் கவுந்தியடிகளின் கால்களில் அமர்ந்து, கையால் தொழுது "மாதவப் பெரியோய்! நன்னெறி நன்கறிந்தும், அவ்வழி நாடாத நான், நற்குடிப்பிறந்த நாணுடை மகளிரொடு கனவிலும் நினைவிலும் கண்டறியாத நீள்நெறியெல்லாம் நினைத்தவுடன் கொண்டு நிந்தனைக்குள்பட்டேன். இம் மாநகரத்தில் நான் சென்றுவருமளவும் என் காதலியைக் காத்தருளவேண்டும்," என்று மீண்டும் வணங்கினன்.

**கவுந்தியின் கருத்துரைகள் :**

அது கேட்ட அடிகள் "அன்பனே! முற்பிறப்பில் செய்த நல்வினையில் சிறிது தீவினையுஞ் செய்தாய். ஆதலால் உனது உற்றோரையும், பெற்றோரையும் உற்ற உயர் பொருள்களையும் இழந்து, காதலியோடு கடுந்துயர் உற்றாய். ஆதலால் பாவ வழியினின்றும் விலகுமின்! அவ்வழி தீவினைப் பயன்களைத் தரும் என்றே, அறவழி நிற்கும் அந்தணர்கள், நாக்கைக் கோலாகவும், வாயைப் பறையாகவும் கொண்டு திறம்படச் சாற்றி அறமுழக்கம்

செய்கிறார்கள். எனினும், புண்ணிய உறுதி இல்லாத மக்கள், அம்மேலோர் சொல்லும் கருத்துரையை உள்ளபடி ஏற்றுக்கொள்ளார்கள். அவர் அறியாமையே, அவர்களுக்குப் பந்தமாகி, அவர்கள் தீமையால் விளைந்த கொடிய வினைகள் முளைக்கும்பொழுது பெருந்துயருற்று "யாது செய்வோம்" என்று ஏங்குவார்கள். ஆனால் நம்மால் விலக்கமுடியாத முன்வினைப்பயன் மூளும்போது முழுதறிந்த ஞானிகள் முனிந்து வருந்தார்கள். சுருட் கூந்தலையுடைய மாதரைப் புணர்ந்தோர்க்குப் பிரிதற் துன்பம், புணர்தற் துன்பம், மன்மத துன்பம் ஆகிய துன்பங்கள் சேரும். தனி வாழ்க்கை உடையோரை, இத்துன்பங்கள் தாக்காவாம். உண்டியும், பெண்டிருமே, உலகவின்பம் என்று, அவற்றில் அகப்பட்டோர் படும் துன்பம் எல்லையற்றது. காமஞ் சார்ந்தார் ஏமஞ் சாரார். அவ்வாறே நீ இன்று இடுக்கண் பட்டு இருக்கின்றாய். இராமனும், நளனும், தம் காதலிகளைப் பிரிந்தபோது பட்ட படுதுயர்போல் நீயும் பரதவிக்கின்றாய்! எனினும் அவர்களைப்போன்று மனைவியை நீங்காமல் காட்டிலும் நாட்டிலும் அவளைப் பிரியாது அவளுடன் வாழும் வாழ்வைப் பெற்றாய். இதனால் நீ பெருஞ்செல்வன். இனி வருந்தாதே. நீ, பாண்டியன் பரவும் மதுரைக்குச் செல். ஊரைச் சுற்றிப்பார். இல்லறம் இயற்றவும், தொழிலறம் செய்யவும் ஏற்றதோர் இடத்தை ஆராய்ந்து வா." என்று அமைதிசெய்து கோவலனை மதுரைக்குள் அனுப்பினார்.

**மதுரையில் மாடலனைக் காணல்:**

அடிகளது அருள் மொழிகளால் அமைதிபெற்ற கோவலன் மதுரை நகருள் மருவி நடந்தான். காவற் காடுசூழ்ந்த நீர் அகழி, யானைக்கூட்டம் கரந்து செல்லும் உள்வீதி, அதைத் தாண்டி உள்ளே கோட்டையில் பல இயந்திரப் போர்க்கருவிகள், மேல் காற்றில் மாடக்கொடிகளின் ஆடல், வையைக் கரையில் உள்ள உய்யானத்தில் காதற் செல்வருடன் பொதுமகளிர் நாவாயிற் செல்லல், அங்கு அவர்கள் தெப்பக்கட்டையைத்

துணையாகத் தழுவிப் புனல் விளையாடல், முதலாம் காட்சிகளையும் இவை மட்டுமா? மாடமாளிகைகள் நிறைந்த பல தெருக்களையும், கைத்தொழிற் சிறப்பையும், வாணிப வளங்களையும் கண்டு ஆ! என்னே! என்று பாண்டியன் பண்பை உன்னி உவகையுற்றான். இக் கவினுறு காட்சியைத் திரும்பி வந்து கவுந்தியடிகளுக்குக் கோவலன் எடுத்துரைத்தான்.

அப்பொழுது மறையோதும் மாடலன் பொதிய மலையை வலம்வந்து குமரியாற்றில் நீராடித் திரும்பிவரும் வழியில் அவ்விடம் வந்து சேர்ந்தான். கோவலன், மாடலனை முன்னே அறிந்தவனாதலின் முன்சென்று வணங்கினான். மாடலன், அவனது வாடிய முகத்தையும், வருந்திய உள்ளத்தையும் கண்டு, "ஐயனே! யான் அறிய நீ இப்பிறப்பில் நல்வினையே செய்தாய். ஆனால், இப்போது இவ் அணங்கோடு இன்னல் உறுதல் முன் வினைப்பயன் போலும்.

"இம்மைச் செய்தன யான்அறி நல்வினை,
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்துஇத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது"

என்று உருகினான். அப்போது கோவலன், மறையவனைப்பார்த்து, "அப்பனே! இன்று விடியற்காலையில் ஒரு தீக்கனவு கண்டேன். பாண்டியன் நகரில் ஒரு பண்பிலா மகனால் துன்பமுறக் கண்ணகி துன்பமுறும் படி நேர்ந்தது, என் ஆடை பறிபட்டு யான் எருமைமேல் ஏறிப்போவதுபோலவும். பின்என் காதலியுடன் மேலுலகம் அடைவது போலவும், மாதவிமகள் மணிமேகலை மாதவம் கொள்வது போலவும் கனவு கண்டேன். அது விடியு முன் கண்ட கனவாதலால், உடனே பலித்துவிடும் அல்லவா?" எனக் கூறினான். உடனே கவுந்தியடிகளும் மாடலனும், அக் கனவால் ஏதேனும் தீங்கு நேருமோ என்று அஞ்சி, "இந்த இடம் துறவிகளுக்கே உரியது. நீ, நகருள் வணிகரிடம் தெரிவித்தால் போதும். உன் வாய்ச்சொல் கேட்டதும் வரவேற்பர். அங்கே சென்று இருப்பதே நல்லது. கதிரவன் மறைவதற்கு முன் இவ் விடத்தை விட்டுச் சென்று விடுக" என்றார்கள்.

அப்போது அங்குள்ள தெய்வத்திற்குப் பால்படைத்துத் திரும்பும் ஆயர் மகள் மாதரி என்பவள், கவுந்தியடிகளைக் கண்டு கை கூப்பினள்.

**மாதரி மனையில் மாநாயகன் மகள்:** அவளைக் கண்டதும் அந்தத் துறவியாருக்குக் கண்ணகியைக் காக்க வல்ல நற்பண்பு உடையவள் இவள் என்ற எண்ணம் வந்தது.

இம் முதுமகள் மாசற்றவள்; தீதிலாச் செவ்வியள்; ஈகை மிக்கள்என்றும், இவளேகண்ணகியைச் சிலவேளை இருக்கச் செய்வதற்கு ஏற்றவள் என்றும் எண்ணினர். உடனே அவளைப் பார்த்து "மாதரி! நான் உரைப்பதை உற்றுக் கேள்! இந்தக் கண்ணகி என்னும் மங்கை உயர் குடிப் பெண்; பெருஞ்செல்வி; இம் மடந்தையின் மாமனர் பெயரைக் கேட்டால் போதும், இவ்வூரிலுள்ள இருநிதிக் கிழவர் அரும்பொருள் அடைந்தாற் போல் ஆனந்தித்துத் தம் அகம் அழைத்துச் செல்வர். அவ்வாறு பெருஞ் செல்வர் வீடு செல்லும் வரைக்கும் இவளை உனக்கு அடைக்கலமாகத் தருகின்றேன். இவளை நீராட்டி, கண்ணுக்குக் கருமையிட்டு, கூந்தல் வாரி, மலர் அணிந்து, தூய ஆடை உடுத்தி, ஆயமும், காவலும், தாயும், எல்லாம் நீயே ஆகி இவளைக் காத்திடுவாயாக! என்னேடு வழிநடந்த இந்த இளங்கொடியைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? இவளுடைய மெல்லிய அடிகள் இதுவரை மண்மகள் அறிந்ததில்லை; தூய பத்தினி; கணவனைப் பிரியாதவள்; அவனே தெய்வமெனப் பணிபவள். அதனல் அவனுடன் எல்லா இடர்களையும் பொறுத்துக் கடுங்கதிர் தெறும் காட்டில் நடந்தாள். அதைக்கண்ட கணவனும் கலங்கினன். தன் நாப்புலர தாகம் தவிராது வாடினும், தனது துயரைப் பாராட்டாமல், கற்புக் கடன் செய்த அழகுத் தெய்வம்.

> "வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது,
> நீணில வேந்தர் கொற்றஞ் சிதையாது,
> பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு"...........

என்னும் நல்லுரையை நீ அறிவாய். தவத்தினர் அடைக்கலமாகத் தந்த பொருள் சிறிதாயினும் பேரின்பம் அளிக்க வல்லது. ஆதலின் இவளை உன்னுடன் அழைத்துச் செல், நீட்டித்து இராதே." என்று கூறி மகிழ்ந்தார். அப்போது, கதிரவன் மேற்கே மறையும்

வேளையாயிற்று. கன்றைத் தேடித் திரும்பும் பசுக்களின் குரல் கேட்டது. ஆயரும், ஆய்ச்சியரும் சூழ்ந்துவர கொடி யாடும் அரண்வாயிலைக் கடந்து கண்ணகியுடனும், கோவலனுடனும் மாதரி தன் வீட்டை அடைந்தாள்.

அடைக்கலப் பொருளாய் அமைந்த கண்ணகியாரை, மாதரி, தன்மனைக்கு அழைத்துச் சென்றாள். பக்கத்தே செம்மண் பூசிய சிறுமனை யிருந்தது. அது கட்டுவேலி சூழ்ந்தது. குளிர்ந்த பொருளால் வேயப்பட்டது. அம் மனையையே, கோவலர்–கண்ணகியார்க்கீந்து, பெருமகிழ்வுடன் பரிவு கூறி உபசரித்தாள். ஆய்ச்சியருடன் கூடி, அரிவையரின் நங்கையான கண்ணகிக்குப் புதுப்புனலாட்டினாள். தன்மகள் ஐயை என்பவளை அறிமுகப்படுத்தி, "இவள் நீங்கள் இட்ட வேலைகளைச் செய்வாள். உங்களுடன் இருப்பாள். நீங்கள் கவலையில்லாமல் இங்கே இருக்கலாம். இனி, உம் கணவராகிய இவருக்குத் துன்பம் உண்டோ? இவர் நோன்பு உடையவர் ஆதலின் அதற்கு ஏற்பச் சமையல் செய்ய வேண்டும்" என்றாள்.

**இல்வாழ்வின் இனிய காட்சி:**

உடனே மாதரியின் கட்டளையால், புதுப்பானைகள், சட்டிகள் வந்தன. பலாக்காய், வெள்ளரிக்காய், மாதுளம் பிஞ்சு, மாம்பழம், வாழைப்பழம், செந்நெல்லரிசி, பால், நெய் முதலியவைகள் கண்ணகியிடம் கொடுக்கப்பட்டன. பலவகைக் காய்களையும் கண்ணகி மெல்லிய விரல்கள் சிவக்க, அழகிய முகம் வியர்க்க, கண்கள் சிவக்க அரிந்தாள். ஐயை வைக்கோலால் அடுப்பு மூட்டினாள். அவளுடன் கண்ணகி, தன் கைத்திறனுக்கேற்பச் சமைத்தாள் கோவலனும், தன் கடன்களை முடித்து வந்தான். புதிய மண்கல நீரால், கண்ணகி, அவன் அடிகழுவி, ஆய்ச்சியர் அழகாக மிடைந்த ஓர் பனை ஓலைத்தடுக்கில் கோவலனை உட்காரச் செய்தாள். இனித்தமக்குறும் துயர்கண்டு மயங்குறும் மண்மகளின் மயக்கம் தீர்ப்பாள் போலத் தரையில் தண்ணீர் தெளித்துத் தடவி, குலை ஈனுத குமரி வாழையின் குருத்தை விரித்து உணவு படைத்தாள். "அடிகள் அமுது அருந்தருள்க" என்று பணித்தாள். கோவலன் உணவை உண்டான். அப்போது, மாதரியும், ஐயையும். கோவலன் கண்ணகியாரின் செவ்வியை.

"ஆயர்பாடியின் அசோதை பெற்றெடுத்த
பூவைப்புதுமலர் வண்ணன் கொல்லோ!
நல்லமுதுண்ணு நம்பி யீங்குப்
பல்வளைத் தோன்றியும் பண்டு நங்குலத்துத்
தொழுனையாற்றினுள் தூமணி வண்ணனை
விழுமந் தீர்த்த விளக்கு கொல்லோ!"

"தென்மதுரையில்,நமது ஆயர்பாடியில் அமுதுண்ணும் இந் நம்பி, அன்று வடமதுரை ஆயர்பாடியில் அமுதுண்ட கண்ணனேயோ! இவனது துயர்தீர்த்த இத்கொடிவளை நங்கை, காளிந்தியாற்றில் கண்ணனைத் துயர்தீர்த்து மகிழ் வித்த ராதை தானே! இவர்கள் காட்சி, நம்கண்களுக்குள் அடங்குமோ! என்று புகழ்ந்து விம்மிதம் கொண்டனர்.

உண்டெழுந்த கோவலனுக்குக் கண்ணகியார் அழகிய வெற்றிலையும் பாக்கும் கொணர்ந்து கொடுத்தார். ஆய்ச்சியர் குரவையாடச் சென்றனர். இருவரும் தனித்திருந்தனர். கண்ணகியின் கருத்தையும், கடமையையும் கணித்த கோவலன், மனம் கசிந்தது. கண்ணகியை வருமாறு அழைத்து, "கல்லும் முள்ளும் கலந்த கானகத்தில், என்னுடன் எழுந்து வந்ததை அறிந்து என்பெற்றோர் மிகவருந்தியிருப்பார்கள். ஆ! இது மாயமோ! முன்செய்த வல்வினையோ? என் உள்ளம் கலங்குகின்றது. பயனற்றவர்களோடு, ஒழுக்கமற்றவர்களோடு, வீண்பேச்சாளர்களோடு கூடிக் காலம் போக்கினேன். கடமையை மறந்தேன். எனக்கு நல்வழி உண்டோ? பெற்ற தாய் தந்தையரின் ஏவலும் தவறினேன். அறிவுடைய வாழ்க்கைத் துணைவியாய் வாய்ந்த உனக்கும் உண்மை வழி நில்லாது ஊறுசெய்தேன். குற்றத்தைச் சிறிதும் எண்ணிப் பார்க்காமல். "மதுரைக்குப் புறப்படு" என்றேன். நீயும் உடனே புறப்பட்டு வந்தாய். என்செய்தாய்?" என்று கூறி மிகமிக வருந்தினன்.

**காதலின் கனிவு**

இவ்வாறு இரங்கிக் கனிவுரை இயம்பிய கோவலனைக் கண்ணகி "ஐய! ஆருயிர்த் தலைவ! அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க்கு எதிர்தல், விருந்து எதிர் கொள்ளல், ஆகிய இல்லறச் செய்கைகளை இயற்றும் தவத்தைச் செய்யாதவளானேன். அவ்வாறு இருந்த என்னை தங்கள் தாயும், தந்தையும் தண்ணளி கொண்டு, அருள்

மொழி கலந்து பாராட்டி என் துயரைப் போக்க முயன்றனர். அவர்கள் எதிரே அல்லல் தோன்றாதவாறு என் இதயத்துள் அதையிருத்தி, இன்முகம் கொண்டு நின்றேன், புன்முறுவல் பூத்து நின்றேன். அகத்தே அமைந்த அருந்துயர் அத்தனையும் அறைவபோல் என்முறுவல் பொய்ப்பட்டு நின்றது. அந்தப் பொய் முறுவலைக் கண்ட அவர்களின் அகம் வருந்தியது. இவ்வாறு பெற்றோர் பெருந்துயர் பொருந்த, போற்றா ஒழுக்கம் பிரிந்து புரிந்தீர். யானோ; சிறிதும் தங்கள் வாழ்வில் மாறாத மனத்துடன் வாழ்ந்திருந்தேன். ஆகையால் ‘புறப்படு’ என்றதும் புறப்பட்டு உடன் வந்தேன் என்றாள். அது கேட்ட கோவலன்.

குடிமுதற் சுற்றமும், குற்றிளையோரும்,
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி,
நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக
என்னொடு போந்தீங் கென்றுயர் களைந்த
பொன்னே ! கொடியே ! புனை பூங்கோதாய் !
நாணின் பாவாய் ! நீணில விளக்கே !
கற்பின் கொழுந்தே ! பொற்பின் செல்வி !
சீறடிச் சிலம்பின் ஒன்று கொண் டியான் போய்
மாறிவருவன் மயங்கா தொழிக !

என்று மனங்குழைந்து தன் காதலியைத் தழுவி உள்ளம் வெதும்பினான். அப்போது தன் கண்களில் கலங்கி எழுந்த கண்ணீரை அவள் காணாதவாறு மறைத்து ஒற்றைச் சிலம்போடு ஆயர்வீட்டை விட்டு வெளியே சென்றான்.

## 2. மதுரை வீதியில் மலர்ந்த விதி.

**பொற்கொல்லன் வஞ்சகம்:**

கண்ணகியின் தனிமையால் கலங்கி நடக்கமாட்டாதவனாய் நடந்த கோவலன் தாதெரு மன்றம், மாதர் வீதி, முதலியவற்றைத் தாண்டிக் கடைவீதியை அடைந்தான். அங்கே நுண்வினைக் கொல்லர் நூறுபேர் பின்வர, சட்டை அணிந்து செல்லும் பொற்கொல்லன் ஒருவனைக் கண்டான். “இவன் பாண்டியனின் அரண்மனைக்குக் கொல்லனாக இருக்கக்கூடும், என்று எண்ணி அவனை அணுகி, “பாண்டிமாதேவிக்குப் பொருத்தமான காற்சிலம்பு ஒன்று இருக்கிறது, நீ மதிப்பிடுவாயோ?” என்று கேட்டான். கோவலன் விதியின் பொருளாய் வீதி

யிலே விழுமுன் நின்ற கொல்லன் "எனக்கு மதிப்பிடத் தெரியாது என்றாலும், வேந்தருடைய முடிமுதலான அணிகலன்கள் செய்யத் தெரியும்," என்று தொழுது கூறினன். உடனே, கோவலன். சிலம்பு வைத்திருந்த முடிச்சை அவிழ்த்துக் காட்டினன். மாணிக்கமும், வைரமும் அழுத்தி உட்கரு அமைத்துச் செய்யப்பட்ட பொன் சிலம்பின் வேலைப்பாட்டை எல்லாம் கொல்லன் குறித்து நோக்கினன். "ஆ! எவ்வளவு அழகான சிலம்பு! என்ன வேலைப்பாடு!" என்று வாய் கூற, மனம், தன் களவின் கருத்தை முடிக்கும் காலம் இது என்று நினைந்தது. உடனே, "ஐய! இவ்வருமைச் சிலம்பு கோப்பெருந்தேவிக்கே தகும். இதைக் குறித்து நான் அரசனுக்கு அறிவித்து வருவேன். அதுகாறும் எனது சிறு குடிலுக்கு அருகே அந்த இடத்தில் இரும்." என்று கூறி அந்தப் புரத்தை நோக்கி விரைந்தான். கோவலனும் அவ்வாறே ஒரு தேவகோட்டத்துட் புகுந்தான்.

**ஊடல் வழியே உருத்த வினை:**

நாடக மகளிரின் ஆடலையும், பாடலையும் கண்டும் கேட்டும், பாண்டியன் மகிழ்ந்திருந்ததைக் கோப்பெருந்தேவி உணர்ந்து ஊடல் கொண்டாள். ஊடற் குறிப்பை உள்ளத்தே மறைத்துத் தலை நோயால் வருந்துவது போலநடித்து அந்தப்புரஞ் சென்று விட்டாள். ஆடல் பாடல் முடிந்தபின் பாண்டியன் அங்கிருந்து புறப்பட்டு ஏவற் பெண்களோடு கோப்பெருந்தேவி இருந்த இடத்தை நினைந்து விரைந்து சென்று கொண்டிருந்தான். அந்நிலையில்தான் வஞ்சகக் கொல்லன் வணங்கி நின்று "அரசே! கண்டேன் கள்வனை: கன்னக்கோலின்றியும், கவைக்கோல் இல்லாமலும் மந்திர வலிமையைக் கொண்டு, வாயில் காப்பவரை மயக்கி, அரண்மனைச் சிலம்பைத் திருடிச் சென்ற கள்வனைக் கையும் மெய்யுமாகப் பிடித்தேன். காவலர்க்குத் தெரியாமல் வந்து என் சிறு குடிலுக்குள் இருக்கிறான்" என்று கூறினன்.

பாண்டியன் சிறிதும் முன்பின் ஆராயாமல் காமக் கனலாலும், கோவலன் கொண்ட முன்வினை விளையும் காலத்தாலும் காவலரைக் கூவி,

"என் தாழ் பூங்கோதை தன்காற் சிலம்பு
கன்றிய கள்வன் கையதாகிற்
கொன்றச் சிலம்பு கொணர்தாக ஈங்கு"

என்று கட்டளையிட்டான். விதியின் வினையால் பொய்யனை பொற்கொல்லனும் மெய்யனாக, மெய்யனை கோவலனும் பொய்யனாகி அமைகின்றார்கள். தன் எண்ணம் நிறைவேறியதாக மகிழ்ந்தான் பொற்கொல்லன். உடனே காவலரைக் கோவலனிடம் அழைத்துச் சென்றான்.

**வளையாத செங்கோல் வளைதல்:**

கொல்லன் கோவலனை நோக்கி, "இவர்கள் எல்லோரும் அரசனால் அனுப்பப்பட்டு இங்கு வந்தவர்கள். சிலம்பைக் காண வந்திருக்கிறார்கள் என்று சொல்லிச் சிலம்பைக் காவலருக்குக் காட்டினான். அவர்கள் கோவலனைக் கண்டு "இவன் இருக்கும் நிலையை நோக்கின் மாசற்றவன் போல் இருக்கின்றான் என்று கூறினார்கள் அவர்கள் கூறியதை மறுத்துப் பொற்கொல்லன் சிரித்து, கள்வர் திறமையெல்லாம் எடுத்துரைத்து, அவர்களுக்குத் துணைசெய்யும் மருந்து, மந்திரம் முதலியவற்றின் பெருமை அனைத்தும் விளக்கினான். அப்போது காவலாளர்களில் ஒருவன், "கள்வர்களை ஒரு காலமும் நம்பக்கூடாது; தவறி விட்டு விட்டால் பிறகு வேந்தன் நம்மை ஒறுப்பான்; ஆகையால் நம்கடமை என்ன என்று எண்ணிச் சொல்லுங்கள்" என்றான். அவன் இவ்வாறு இயம்புதல் முடியுமுன், அறிவற்ற ஒருவன் கையிலிருந்த வாளை மெய்யோனான கோவலன் மேல் வீசினான். வாள் வெட்டியது. கோவலன் மண்மிசை வீழ்ந்தான். அவன் வாழ்வும் விடிந்தது. அறத்தேவதை அலறினாள். பாண்டியன் செங்கோல் வீழ்ந்தது. ஊழ்வினை உயர்ந்தது. ஆ! அந்தோ!!

## 3. கணவனை இழந்த கண்ணகி,

**தீக்குறி:**

பாண்டியன் அரண்மனைக்கு அன்று மாதரி நெய்யளக்கும் நாள். அதற்காகக் கடைகயிறும், மத்துங் கொண்டு தயிர் கடையச் சென்றாள். மாதரி, பிரையிட்ட பால் உறையவில்லை. பசுக்களின் கழுத்து மணிகள் அறுந்து வீழ்ந்தன. வெண்ணெய் உருகாதாயிற்று. குட்டி ஆடுகள் துள்ளாது முடங்கிக்கிடந்தன.

பசுக்கள் உடல் நடுங்கி இரங்கின. இதைக் கண்ட ஆய்ச்சியர் பிறர் அஞ்சினார்கள். குரவைக் கூத்தை ஆடினார்கள். மாதரி, பூவும் புகையுங்கொண்டு வைகைத்துறையில் நீராடி நெடுமாலை வழிபடச்சென்றாள்.

அச்சமயம் ஊர்ச் செய்தி கேட்டு ஐயை தாய்க்குத் தெரிவித்தாள். ஆயர்சேரியில் அனைவரும் திடுக்கிட்டனர்.

**கண்ணகியின் கலக்கம்:** கண்ணகி மனம் கலங்கியது, தன் மனக் கலக்கத்துடன் அவள் ஐயையைப் பார்த்து "தோழி! என் காதலன் இன்னும் வரக் காணேன், என் உள்ளம் கலங்குகின்றது. அன்பனைக் காணாது என் அகம் அலமருகின்றதே; ஏதேனும் வஞ்சமுண்டோ என்று என்நெஞ்சு மயங்குகின்றது. எளியேனைக் குறித்து இவ்வாய்ச்சியர் என்ன பேசிக்கொள்கிறார்கள், நீயேனும் சொல்லமாட்டாயா?" என்று முறையிட்டுக் கலங்கினாள். உடனே ஐயை "உனது கலக்கம் உண்மைதான், அந்தோ! பாண்டியன் அரண்மனையில் சிலம்பைத் திருடிய கள்வனென்று ஐயுற்றுக் கோவலனைக் காவலர் கொன்றனர்." என்று மெல்லச் சொன்னாள்.

கண்ணகி பொங்கி எழுந்தாள்! விழுந்தாள்! கதிர் பொழியும் திங்கள் கார்மேகத்துடன் நிலத்தில் வீழ்ந்தது

**கண்ணகியின் கடி சொல்:** போல முகமும், கருங்கூந்தலும் சோர கண்ணகி புரண்டாள். செங்கண் சிவப்ப அழுதாள். 'என் கண்ணாளா! காதலா! அந்தோ! ஐயோ! எங்குற்றாய்? ஆ! மண்ணவன் மறுப்பட்டான்? இனி என் செய்வேன்?

"மன்பதை அலர் தூற்ற மன்னவன் தவறு இழைப்ப
அன்பனை இழந்தேன் யான் அவலம் கொண்டு அழிவலோ!
"மறனேடு திரியும்கோல் மன்னவன் தவறு இழைப்ப
அறம் எனும் மடவோய் யான் அவலம் கொண்டு அழிவலோ!
செம்மையின் இகழ்ந்தகோல் தென்னவன் தவறு இழைப்ப
இம்மையும் இசை ஒரீஇ நினைந்தேங்கி அழிவலோ!

என்று அரற்றினாள். குரவைக்கூத்துக்காகக் கூடிய ஆய்ச்சியர் அனைவரையும் பார்த்து முறையிட்டாள். வானத்தை நோக்கி வெய்யோனை விளித்தாள்!

" காய்கதிர்ச் செல்வனே! என்கணவன் கள்வனோ?" என்று அலறினள். அதற்கு விடைகூறுவதுபோல் "உன் கணவன் கள்வன் அல்லன்; கருங்கயற்கண் மாதரசே! அப்படிப் பொய்கூறி அவம் ஆற்றிய இந்த ஊர் தீப்பற்றி அழிந்து விடும்." என்று ஒரு குரல் கேட்டது.

உடனே மற்றச் சிலம்பைக் கையில் ஏந்தியவாறு ஆயர்பாடியை நீத்தாள். நகருக்குள்ளே சென்று "நீதிமுறையில்லா அரசனுடைய ஊரில் வாழும் பத்தினிப் பெண்களே! என் முறையைக் கேளுங்கள்! யான், படாத துன்பம் பட்டேன். இதுவரையில் யாரும் உறுத துன்பம் உற்றேன்! என்கணவன் கள்வனல்லன். அவன் உயர் குடிப் பிறந்த உத்தமன்! என் காற்சிலம்பில் ஒன்றை விற்க இந்நகருக்கு வந்தான்; இதோ! அதேபோன்ற மற்றோர் சிலம்பு என் கையில் உள்ளது. நான் கொடுத்த சிலம்பு எப்படிக் கோப்பெருந்தேவியின் சிலம்பாகும்? என்கணவன் எப்படிக் கள்வனானன்? இனி என் இனியானைக் காண்பேன்! கண்டால் கருத்துரை கேட்பேன்! என் கற்பின் பொற்பால், கருதியது எடுத்து உரையாது போனல் பிறகு என்னை எள்ளுங்கள்! ஏசுங்கள்!!" என்றாள். இவ்வாறு அழுத கண்ணகியைக் கண்ட மதுரையார் கலங்கி; "இவளுக்கு நீங்காத துன்பத்தைச் செய்துவிட்டு, என்றும் கோணாத செங்கோல் வளைந்துவிட்டதே! இதை என்ன என்பது? மண்குளிர மறவேல் எடுக்கும் தண்குடை நிழலும், வெம்மை விளைத்து விட்டதே! இது என்ன? பொன் சிலம்பைக் கையில் ஏந்தி நம்பொருட்டாக இந்தப் புதியதெய்வம் இங்கே வந்திருக்கிறதே! இஃது என்ன விந்தை!" என்று பலவாறு சொல்லி நொந்தார்கள். சிலர் கண்ணகியை அழைத்துச் சென்று கொலைக்களத்தில் கோவலனைக் காட்டினர். குருதியிடையே கிடந்த கொழுநனை அவள் கண்டாள். அவள் துயரைக் காணப்பொறுக்காத ஆதவன் அலைகடல் மூழ்கினன். கண்ணகியின் முறையீட்டால் ஊர் முழுவதும் ஓ வென்ற ஒலி நிறைந்தது. அந்தோ!

**கண்ணகி முறையீடு:**

"யாருமில் மருள் மாலை இடையுறு தமியேன் முன்
தார்மலி மணிமார்பன் தரைமூழ்கிக் கிடப்பதோ!
பார்மிகு பழி தூற்றப் பாண்டியன் தவறிழைப்ப
ஈர்வதோர் வினைகாணு இதுவென வுரையாரோ!

கண்பொழி புனல்சோருங் கடுவினை யுடையேன் முன்
புண்பொழி குருதியீராய்ப் பொடியாடிக் கிடப்பதோ
மன்பதை பழி தூற்ற மன்னவன் தவறிழைப்ப
உண்பதோர் வினை காணாய் இதுவென வுரையாரோ"

கொண்ட கணவர் உற்ற குறையைத் தாங்கிக் காப்பாற்றும் கற்புடை மகளிரும் இந்நாட்டில் உண்டா! ஈன்ற குழந்தையை எடுத்துக் கொஞ்சி வளர்க்கும் அருளுடைய சான்றோரும் இந்த ஊரில் உண்டா?!! வாளால் கணவனை வெட்டிக் கொன்று கோதுற்ற பாண்டியன் மதுரையில் தெய்வமும் உண்டா !!!

இவ்வாறு சொல்லி அழுது கணவனுடைய மார்பைத் தழுவிக் கொள்ள; கோவலன் எழுந்து நின்றான்.

**இறந்த கோவலன் எழுந்து நிற்றல்:**

"அந்தோ! உன் மதிமுகம் கன்றியதே!" என்று கண்ணீரை மாற்றினான். கண்ணகி ஏங்கி நிலத்தில் வீழ்ந்தாள். காதலனுடைய கால்களைக் கைகளாற் பிடித்தாள். கோவலனோ "நீ இங்கே இரு" என்று சொல்லிப் பிரிந்தான். அந்நிலையில் கண்ணகி, "இது என்ன மாயமோ? வேறு யாதோ? என்னை மருட்டியது தெய்வமோ? எங்கு தேடுவேன்? கணவன் மீது சுமத்தியது வீண்பழி! இது பொய்யுரை, இந்தக் கடுஞ்சினம் தணிந்தால் அல்லாமல் கணவனை யான் கூடுவதில்லை! இதோ! மறமன்னவன் மாடி ஏறுகின்றேன். அவன் மறுவையும், என் மாண்பையும் அவனி அறியச் செய்கின்றேன்" என்று எழுந்தாள். கண்ணீர் சொரிந்தாள். தன் பக்கம் தருமம் தழுவுவதை நினைந்தாள். அரண்மனை நோக்கி விரைந்தாள்.

## 4. பாண்டியன் முன் பத்தினிப் பெண்.

இஃது இவ்வாறிருக்க. பாண்டியன் மனையில் பாண்டிமாதேவி ஓர் தீக் கனவு கண்டாள். அரசனது செங்

**பாண்டிமாதேவி கண்ட கனவு:**

கோலும், வெண்குடையும் கீழே விழுவது போலவும், இறைவனது கொற்ற வாயிலில் கட்டிய அசையாமணி அசைவது போலவும், பகற்பொழுதில் விண்மீன் விளங்கி உதிர்வது போலவும், நான்கு திசையும் நடுங்குவது போலவும் கனவு கண்டு, அத்தீக் கனவால் பெருந்துயர் பொருந்

தும் என்று பயந்து அரசனிடம் சென்று தேவி கனவைச் சொல்லிக்கொண்டிருந்தாள். அரசனும், அரியாசனத்தில் அமர்ந்து, அரசமாதேவி அறைந்த கனவை ஆய்ந்து கொண்டே கேட்டான்.

அப்பொழுது அரண்மனை வாயிலில் கண்ணகி தோன்றிக் காவலனை விளித்தாள். "ஏ! வாயில் காவலனே! அழகற்ற அகத்தோடு அறம் அழிய அவம் ஆற்றிய அரசனது வாயிலைக் காப்பவனே! 'சிலம்பைக் கையில் ஏந்திய பெண் – கணவனை இழந்தபெண், வாயிலில் நிற்பதாக அறிவிப்பாய்'" என்றாள். வாயில் காவலன் அரசனிடம் சென்று, அவனை வணங்கி, "அரசே! நீடுவாழி! வெறுத்த முகத்தோடு கொதிக்கும் மனத்தளாய் கையில் ஒரு சிலம்புஏந்திய பெண் வந்து நிற்கின்றாள்" என்றான். அரசன் அயர்ந்து "அவளை இங்கே அழைத்து வா!" என்றான். வாயிலாளன் வந்து கோயிலுட் செல்ல வழி காட்டினான். கண்ணகியைக் கண்ட வேந்தன்; "நீர்பொழியும் கண்களோடு எம்முன் வந்த நீ யார்? இக்கோலம் ஏதுக்கு?" என்றான்.

**வழக்குரைத்தல்:**

ஆய்வு அற்ற அரசே! நீதியை நிலை நிறுத்த தன் உடலையும், உயிர் போன்ற மகனையும் கொடுத்து அறம் நிறுத்திய அரசர்கள் ஆண்ட பூம்புகாரே என் ஊர். அந்த ஊரில் பழியற்ற சிறப்பும் புகழும் வாய்ந்த பெருங்குடியில் மாசாத்துவான் மகனார்க்கு, வாழ விரும்பி, ஊழ்வினையின் காரணமாக உன் நகர்க்குள் புகுந்து என் காற்சிலம்பு விற்க வந்தவிடத்தில் உன்னிடம் கொலைக்கு ஆளான கோவலன் மனைவி நான். என் பெயர் கண்ணகி" என்று நாடும் வீடும் விளங்க எடுத்துரைத்தாள்.

பாண்டியன் பதைத்த நெஞ்சனாய் "பெண் அணங்கே! கள்வனைக் கொல்லல் கடுங்கோலாகாது. அரசநீதி அது" என்றான். உடனே கண்ணகி "யார் கள்வன்?" என் காதலனா கள்வன்? யான் அவன் மனைவியா? உண்மை உணராத வேந்தே! "இதோ என் கால் சிலம்பில் உள்ளது மாணிக்கம்" என்றாள். "அப்படியாயின் என் சிலம்பில் உள்ளது முத்து" என்று வேந்தன் கூறி, அதைக் கொண்டு வரச்சொல்லி அவள் முன் வைத்தான். கண்ணகி

உடனே தன் காற் சிலம்பை உடைத்தான். அதிலிருந்து மாணிக்கம் அவன் மறு எடுத்து உரைப்பது போலத் தெறித்தது.

மணியைக் கண்ட மன்னன் மயங்கினன். "ஆ! பத்தினி! ஆ! அறக்கடவுளே! என் புகழ்முடி வீழ்ந்தது; என் செங்கோல் தளர்ந்தது; என்குடை தாழ்ந்தது; பொற் கொல்லன் புகன்றது பொய்! படுபொய்!! அப்பொய்யன் உரையால் ஒரு மெய்யோனைக் கொன்றேன்! உனது காற் சிலம்பை எனதெனச் சொல்லிப் பழி சுமந்த

"யானே அரசன்! யானே கள்வன்!!
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள்"

ஆ! மதிகெட, குலங் கெட வாழேன்! வாழேன்!!" என்று அரியணையினின்று கீழே வீழ்ந்து இறந்தான். கோப் பெருந்தேவியும்; "கொடுமை! இஃது என்ன?" என்று உயிர் நடுங்கினள்; கணவனைத் தொட்டுப் பார்த்தாள், கணவன் காலன் கைப்பட்டதை அறிந்தாள். "கணவனை இழந்தவர்களுக்கு ஆறுதல் சொல்லிக் காட்ட வழி இல்லையே" என்று கண்ணகி காலடியில் வீழ்ந்தாள்.

கடிசினம் தணியாத கண்ணகி, "வேந்தன் தேவீ! யான் பாவி! ஒன்றும் அறியேன்! ஆயினும் ஒன்று அறைவேன்; "அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றமாய் அமையும். முற்பகலில் பிறருக்குக் கேடு விளைவித்தவன், பிற்பகலில் தான் கெடுவது திண்ணம். என் ஊரே பூம்புகார். அது பத்தினிப் பெண்டிரின் தாயகம்; அத்தாயகத்தில் யானும் ஒரு பத்தினியானல், அரசோடு, மதுரையையும் ஒழிப்பேன். இதை நீ காண்பாய்!"

மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே ஆமாகில்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும் என்
பட்டிமையும் காண்குறுவாய் நீ."

என்று சொல்லி நின்றாள். அரசதேவியும், தன் உயிர் கொண்டு அரசனது உயிரைத் தேடுவாள் போல உயிர் துறந்தாள்.

8

அரண்மனைக்கு வெளியே சென்ற கண்ணகி, மதுரை மக்களை விளித்து, "மக்காள்! அறம்மறந்த அரசரின் இந் நகரில் சீற்றங் கொண்டேன். என் மேற் பிழைஇல்லை. இங்கே நடந்த அதர்மமே மதுரையை இதோ எரிக்கின் றது பாருங்கள்!" என்று கூறித் தனது இடது முலையைத் திருகி மூன்று தடவை மதுரையை வலம்வந்து ஒரு வீதியில் எறிந்தாள். உடனே நீலமேனியும், செஞ்சடையும், வெண் பல்லும், பார்ப்பனக் கோலமும், கொண்டு தோன்றினன் அக்கினி தேவன். "அம்மா! உனக்குப் பிழை செய்த நாளில் இவ்வூரை எரிக்கவேண்டும் என்ற ஒரு ஆணை எனக் கேற்பட்டுள்ளது. ஊர் முழுவதும் எரிப்பதா? அன்றேல் யாராயினும் தப்பிப் பிழைக்க வேண்டுமா? என்று அவன் வினவினன்.

**கண்ணகியின் கனல்:**

"பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவியெனும் இவரைக் கைவிட்டுத்
தீத் திறத்தோர் பக்கமே சேர்க!"

என்று ஏவினள் வீரபத்தினி. உடனே மதுரை தீப்பற்றி எரிந்தது. இதனுல் கண்ணகியாரின் உள்ளத்தில் அரசன் தன்பிழைக்குத் தானே கழுவாய் தேடிய இனிய செயலால் மறநிலை மாறி அறநிலை அரும்பிற்று என்பது உன்னி உணர்வார்க்கு நன்கு புலப்படும்.

## 5. விண்ணுலகடைந்த வீரக் கண்ணகி.

இவ்வாறு மதுரை மாநகரம் கற்புக்கனலால் பாழ்பட் டது. அப்போது ஆருருற்ற வீரபத்தினியின் முனனல் அனலில் வெம்மைக் காற்ருத மதுரைமா தெய்வம் தோன்றி, "அம்மையே! நான் இந்த நகருள் உறையும் தெய்வம். உன்னிடம் சில உண்மை சொல்ல வந் தேன். இம் மதுரையின் முன்மன்னர் மறுவுற்ற கொடுங் கோலரல்லர். இப்போது ஆண்டநெடுஞ்செழியனும், செங் கோல் மன்னனே யாவன். ஆயினும் இத்தீமை யியைந்த வரலாற்றை உரைப்பேன் கேள்! முன்னுள், கலிங்க நாட்டிலுள்ள சிங்கபுரம் என்னும் நகரத்தை வசு என்னும் ஒரு அரசன் ஆண்டுவந்தான். அப்போது கபிலபுரம் என் னும் நகரத்தைக் குமரன் என்னும் மன்னன்

**மதுரைத் தெய்வம் தோன்றல்:**

ஆண்டு வந்தான். இவ்விரு அரசரும் தம்முள் மாறுபட்டு, ஒருவரை ஒருவர் வெல்லக் கருதினர்கள். அப்பொழுது சிங்கபுரத்துக் கடைத்தெருவில் வணிகமுறையில் பண்டம் விற்றசங்கமன் என்னும் வணிகனைப் பகையரசனுடைய ஒற்றனென்று தவருக எண்ணி; அந்நகர்க் காவலனாய் அமர்ந்திருந்த பரதன் என்பவன், அவனை அரசன் முன் விடுத்து அவன் ஆணைப்படி கொலைசெய்து விட்டான். அப்பொழுது அவ்வணிகனது மனைவியாகிய நீலி என்றவள் ஆற்றுளாய், பதினன்கு நாட்களாகப் பல இடங்களிலும் அலைந்து திரிந்தபின் ஒருமலையில் ஏறித் தன் உயிரை விட்டாள். விடும்போது, "எனக்கும் என்கணவனுக்கும் இப்பிறப்பில் ஏதம் செய்தோர், மறுபிறப்பில் எம்மைப்போல் இன்னல் அடைவராக!" என்று சாபம் இட்டாள். அப்பரதனே இப்பிறப்பில் கோவலனாய்ப் பிறந்தான். ஆதலால், நீயும் உன்கணவனும் இத்துன்பமடைந்தீர்கள். இன்னும் பதினன்கு தினங்கள் கழிந்த பின்னர் நீ உன் கணவனைக் கண்டு மகிழ்வாய்" என்று உரைத்து மறைந்தது.

**கண்ணகி விண் செல்லல்:** அதன்பின் கண்ணகி இரவு பகலின்றி, மேடு பள்ளம் பாராமல் வைகைக் கரைவழியே மேற்கு நோக்கி நடந்து கடல் வயிறு கிழித்து, மலைநெஞ்சு பிளந்து, அவுணரைக் காய்ந்த வேலவன் வீற்றிருக்கும் திருச்செங்கோடு மேல் ஏறி, அங்குள்ள வேங்கை மரத்தின் நிழலில் நின்ருள். நின்ற கண்ணகியாரைக் கண்டகுறவர்கள் "அம்மையே! நீர்யார்? என்றுவினவினர்கள். அதற்குக் கண்ணகி, பழவினையால் மதுரை நகரில் பதியையிழந்த கடுவினையேன் யான்" என்று மறுமொழி கூறினள். இதைக்கேட்ட குறவர்கள் தமது இருகை கூப்பி இறைஞ்சினர்கள்.

அங்கு தேவர்கள் பூமாரி பொழிய, விண்வழியே கோவலன் இறங்க, கண்ணகி களிகூர்ந்து அத்தேரிலே ஏறி விண்ணுலகு அடைந்தாள்.

**குன்றவர் குதுகலம்:** இவ்வாறு இனித்த கணவனுடன் இணைந்து விண் சென்றதைக்கண்ட குன்றவர்கள் ஆவேசப்பக்தியுடன், "சிறுகுடியீரே! சிறுகுடியீரே!! இவளைப் போன்ற ஒரு தெய்வம் நம்குலத்திற்கு இல்லை. இந்த நெடுவேள் குன்றில், ஓங்கு மரநிழலில் இப்பத்தினியைத் தெய்வமாகக் கொள்ளுங்கள்.

குறிஞ்சிப்பறை கொட்டுங்கள்! சிறுபறை கொட்டுங்கள்! கொம்பூதுங்கள்! கோலமணியடியுங்கள்! நறும்புகைகாட்டி நல்மலர் எடுங்கள்! ஒருமுலேயிழந்த ஒள்நுதலாளுக்கு, இப் பெருமலே மாரு வளஞ்சுரக்க என்று பூப்பலி செய்யுங் கள்! என்று வணங்கினர்கள். பின் குறவர்கள்,

பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்
கோமுறை நீங்கக் கொடிமாடக் கூடலைத்
தீமுறை செய்தாளே யேத்தியாம் பாடுகம்
தீமுறை செய்தாளே யேத்தியாம் பாடுங்கால்
மாமாலே வெற்பன் மணவணி வேண்டுதுமே

என்று அகப்பொருள் முறையில், மாமாலே வெற்பன் மண வணி வேண்டிப் பலர்தொழும் பத்தினி கண்ணகிக்கு, காதற் தலேவனே வானேர் காட்டிக்கொடுத்த தன்மையைப் பாடிக் குரவையாடினர்கள்.

நண்ணும் இருவினேயும் நண்ணுமின்கள் நல்லறமே
கண்ணகிதன் கேள்வன் காரணத்தால்—மண்ணில்
வளேயாத செங்கோல் வளேந்ததே பண்டை
விளேவாகி வந்த வினே.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றெழுவாளேத்
தெய்வந் தொழுதகைமை திண்ணிதால்—தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து".

# ௩. வஞ்சி வணங்கிய வானுறைதெய்வம்

## 1. குன்றக் குறவரில் குடிகொண்ட கண்ணகி.

**மலைவளத்தில் கண்ணகி கதை:**

கடற்கடம்பு எறிந்து இமய முடியில் இணையிலா விற் பொறித்த நெடுஞ்சேரலாதன் மகன் செங்குட்டுவன், அவன் மனைவி வேண்மாள், அவன் தம்பி இளங்கோவடிகள், இம்மூவரும் சங்கப் புலவர் சாத்தனருடன் மலைவளங்காண விரும்பி; பெரியாற்றங்கரை மணற்குன்றில் வந்து தங்கினர்கள். குறவர்கள், அரசன் வந்து தங்கியிருத்தலைக்கேட்டதும்; யானைத்தந்தம், அகிற்கட்டை, வெண்சாமரை, தேன்குடம், சிந்துரக்கட்டி, அஞ்சனக்கட்டி, தெங்கின் பழம், தேன்மாங்கனி, கமுகின் குலை, கரும்பு, கோலமயில், கானக்கோழி, அரியின்குருளை, முதலியன கொண்டு அரசனைக் கண்டு, "அரசே! உனது கொற்றம் வாழ்க! இறைவ! ஒருவிந்தை: இந்தமலைமேலுள்ள அந்த வேங்கை நிழலில் ஒரு காரிகை நின்றாள். அவள் ஒருமுலை இழந்தவள். கணவனையிழந்து துயருற்றவள். அவள்முன், அவள்கணவனுடன் தேவர் தோன்றினர். அவனுடன் கூடி அப்பத்தினி விண்ணுலகு புகுந்தனள். அவள் எந்நாட்டவளோ? யார் மகளோ? யாம் அறியோம்." என்று உரைத்தனர்.

இச்செய்தியைப் பக்கல் இருந்த பைந்தமிழ்ப் புலவர் சாந்தனர், "அரசே! அவள் வரலாறு யான் அறிவேன். அவள் சோழநாட்டவள். அவள் பெயர் கண்ணகி, அவள் தீவினைச்சிலம்பு காரணமாகப் பாண்டிநாட்டில் தன் பதியை இழக்க, அவ்விழப்பைப் பொறுது தன் மறுகாற் சிலம்பால் பாண்டிமன்னனை மடியச் செய்து, "மன்னன் செல்வழிச் செல்க யான்," என்று பாண்டிமாதேவி தன்னுயிர் கொண்டு கணவனுயிர் தேடினள் போல்மாய, கண்ணகி அத்துடன் அமையாது; ஒரு முலைதிருகி, மதுரையை அழித்து நின்நாட்டிற்கு வந்தாள் அப்பத்தினி! நீ நல்வினை செய்தாய்" என்று தன்னுரையை முடித்தார்.

இக்கதையைக் கேட்ட சேரன் இன்பமும், துன்பமும் கலந்த மனத்தனனாய் "புலவ! தனது நீதி விளைந்தது என்று கேட்டதுமே, பாண்டியன் உயிர் விட்டான்; தான் நடு நிலையில் இருந்து நலிந்த நவை மிகு சொல் எம்போன்ற மன்னர் செவிகளில் விழாமுன் பாண்டியன் உயிர் விட்டான். தன்னுயிர் கொடுத்துத், தான் தாங்கிய செங்கோலின் தவறைத் தவித்த தகைமை என்னே! ஆ! காவல் தொழில் எளிதோ! மழைவளம் மாறினும், மன்னுயிர் வருந்தினும் மிகப்பெரிய அச்சமுண்டாம். அரசாட்சி, அனைவரும் பணிந்து புகழும் தொழில் என்பதில்லை. அதில் துன்பமே மிகுதி," என்றான். பிறகு தன்மனைவி வேண்மாளைப் பார்த்து "தேவீ! கணவனுயிருடன் தன்னுயிர் கொண்டுசென்ற கோப்பெருந்தேவி, கணவனையிழந்து வீரபத்தினி கண்ணகி, இவ்விருவருள் எவர் தங்கள் உள்ளத்தைப் பிணித்தார்கள்?" என்று கேட்டான் சேரன். "அரசே! பாண்டிமாதேவி, வானுலகில் பெருந்திருவுறுக! நமது நாட்டையடைந்த இப்பத்தினியைக் கொண்டாட வேண்டும்" என்றாள் அரசி.

**ஆட்சியின் அருமை:**

உடனே அரசன் அமைச்சரை நோக்கினான். நோக்கறிந்த அமைச்சர், "பத்தினிச்சிலை நாட்டவேண்டும், அதற்குப் பொதிகையில் எடுத்துக் காவேரியில் நீர்ப்படை செய்யலாம். அல்லது இமயத்தில் கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்யலாம்" என்றனர். செங்குட்டுவன் புகழ்வாள் ஏந்திய எமது வீரமரபிற்குப் பொதியிற் கற்கொள்ளல் பெருமையன்று இமயமே இனியது" என்றான்.

வில்லவன் கோதை என்னும் மந்திரி உடனே "மன்ன! நீடு வாழ்க! முன்னே கொங்கர் செருக்களத்தில் தோற்று, சோழனும் பாண்டியனும் தந்தம் கொடி தாழ்த்தி ஓடினர். இச்செய்தி, இத்தரை முழுதும் கேட்டது. கொங்கர், கலிங்கர், கங்கர், முதலிய பல சிற்றரசர்கள், வட ஆரிய அரசர்களுடன், சேர்ந்து தமிழ்ச்சேனையை எதிர்த்த காலத்தில் நீ உனது யானையைச் செலுத்திய ஆற்றல் என் கண்ணை விட்டு என்றும் நீங்கப் போவதில்லை. எனது அரசியும், உனது தாயுமான நற்சோணை இறந்தபோது அவள் அங்கத்தைக் கங்கையில் நீராட்டிய காலத்தில் ஆயிரவருக்கு

**சிலையெடுக்கச் சிந்தித்தல்:**

ஒருவனாய் நின்று வென்ற காட்சியைக் கடுங்கட் காலனுமே கண்விழித்துக் கண்டதன்றோ. இத்தகு இனிய இயல்புள்ள நீ, இந்நாடு முழுமையும் தமிழ் நடாகக் கருதி வடநாடுமேல் எழுந்தால், அவ்வெழுச்சியைத் தடுப்பவர் யார்? ஆதலால் நம்வருகையை எழுத்துமூலம் அறிவித்தல் நலம்" என்றான்.

அழும்புல்வேள் எனும் அமைச்சன் "பகைவரின் ஒற்றர் நமது வஞ்சியில் இருப்பதால் அவரே இச்செய்தியைத் தமது அரசர்க்கு அறிவிப்பர்; ஆதலின் நாம் இங்கே பறையறிவித்தாற் போதும்" என்றான். அதற்கிசைந்து செங்குட்டுவன் வஞ்சிமாநகர் புகுந்தான்.

## 2. சிலை எடுக்க எழுந்த சித்திரம்.

வஞ்சிமாநகரத்தில் அரசனது பட்டத்துயானையை அழகு செய்து அதன்மீது பறையேற்றி

**"வாழி எங்கோ! மன்னவர் பெருந்தகை**
**ஊழி தோறூழி உலகங் காக்க!"**

"எமது அரசன் படை எடுக்கப் போகின்றான். ஆதலால் வடநாட்டில் வாழும் மன்னர் இடுதிறை எதிரே கொண்டு வருக!

**செங்குட்டுவன் வஞ்சினம்:**

அங்ஙனம் கேட்டு வாரீராகில் அலைகடல் அரணாய் அமைந்த கடம்பமரத்தை வெட்டிய கடும்போர் வார்த்தையையும், மலைப்பிளவில் எழுதிய வியம்பெறு வார்த்தையையும் கேட்டு வாருங்கள், அல்லேல் கடலுட் புகுந்தும், மலைமீதேறியும் வாழுமின்! அங்ஙனம் செய்யாவிடில் துறவறம் பூண்டு வாழுமின்!" என்று பறையறைந்த ஓசை நாடெங்கும் பரந்தது. அதன்பின் சேரன் அரியணையேறினான். தானைத்தலைவருடன் ஆசான், கணிதவல்லுனர் அமைச்சர் அனைவருங் கூடி அமர்ந்திருந்தார்கள். அவ்வமயம் அரசன் அவர்களை நோக்கி "இமயமலையிலிருந்து இங்குபோந்த சில முனிவர்கள் வடநாட்டிலுள்ள ஆரிய மன்னர்களான கனகனும், விசயனும் தமிழரசனது தகுதியறியாது தகாத வார்த்தைகள் அறைந்தனர் என்று கூறினார்கள். இவ்வுரை கேட்டு அயர்ந்து இருத்தல் எம் போன்ற அரசர்களுக்கு அழகு தருவதன்று. கண்ணகி சிலையை அக் கனகன் முதலான ஆரியர் தலையில் ஏற்றி மீளேனாயில் பகையரசரை நடுங்கச்

செய்யும் ஆற்றல் அற்றுக் குடிகளை வருத்தும் கொடுங்கோலனுக்கு ஒப்பனாவேன்" என்று வஞ்சினங் கூறினான். அப்பொழுது ஆசான் "இமையவரம்ப! அணிமுடியில் ஆத்தி சூடிய சோழனையும், வேப்பமாலை சூடிய பாண்டியனையும் அல்லவா ஆரியமன்னர் அவ்வாறு அறைந்ததாகத் தெரிகிறது. அஞ்சினார்க்கு அபயமளிக்கும் அடுபோர் அண்ணலே, நீ வஞ்சினம் கொண்டு, பொருதால் நின்னை வெல்லும் மன்னவரும் உளரோ? ஆதலால் சினந்தணிக!" என்று ஆறுதல் கூறினான்.

அச்சமயம் சோதிடன் எழுந்தான்; அவன் அரசனை வணங்கி "வெந்திறல் வேந்தே! வாழ்க நின் கொற்றம்! இருநீர் மருங்கின் மன்னரெல்லாம் நின் சேவடிபணியும் நல்ல முகூர்த்தம் இதோ வந்துள்ளது. நீ முன்னிய வடதிசையில் இப்பொழுதே புறப்படுக" என்றான்.

**நல்லநாளில் குடைவாள்புறப்படல்:**

உடனே அரசன் "என் வாளும், கொடையும் வடதிசை பெயர்க!" என்று ஆணையிட்டான், பாரைத்தாங்கும் பாம்பும் அஞ்ச, வீரர் ஆர்த்தனர். முரசெழுந்து ஒலித்தது. ஐம்பெருங்குழுவினர், எண்பேர் ஆயத்தார், அரசனுக்குகந்த கருமவினைஞர் கணக்கியல் வினைஞர், தந்திரவினைஞர், முதலியபரிவாரங்களெல்லாம் "மண்திணி ஞாலம் ஆள் வோன் மன்னுக!" என்றுவாழ்த்தெடுத்தனர். பகைவரைப் பணியவைக்கும் பரந்த படையின் கொடிகள் வானில் எழுந்தது. அணிபல மலிந்த யானையின் மேல், வாளும் குடையும் ஏற்றிப் புறநிலைக் கோட்டத்தில் பெயர்த்துவைத்து, அரசவையைச் சேனைத்தலைவர்கள் அடைந்தார்கள். அன்று அரசன் தனது போரிடும் படைகளுக்குப் பெருஞ் சோறளித்து வளர்முடியில் வஞ்சிமாலை சூடினான். அணிவாயிலில் காலை முரசும் ஒலித்தது. பிறரை வணங்காது சென்னியுடைய சேரன், பிறைசூடிய பெருமானை வணங்கி கடக்களியானைப் பிடர்த்தலையில் ஏறினான். நாடகமடந்தையர் ஆடரங்கெங்கும் குவிந்த கையுடன் "கொற்றவேந்தே! நீ வாகைசூடிவரும் உலா; எம் வெள் வளைகளைக் கவர்வதாக" என்ற வாழ்த்தொலியின் நடுவே அரசன் வஞ்சி நகரின் நின்று புறப்பட்டான்.

## 3. நீள்வீரர் நின்ற நீலகிரி.

**அந்தணர் வேண்டுகோளும் வீரர் ஆர்ப்பும்:**

தண்டலைத் தலைவருடன் தாவியாடும் கொடிப்படை, முன்னே நடந்தது. அனைவரும், அலைத்தலையில் வெள்ளை நுரையேந்திய கடற்கரை வழியாக நடந்து நீலகிரிச்சாரலைச் சேர்ந்தனர். நால்வகைச் சேனைகள் நற்காவலில் நிற்க, காவலன் கரியினை விட்டிறங்கி அருந்திறல் கொண்ட மெய்காப்பாளர் அமைந்த கூடார அமளியில் ஏறினன். சேனையின் முழக்கம் கேட்டுச் செவ்வானில் சென்ற முனிவர்கள் சிலர் கீழே இறங்கி மின்னொளி மேனியுடன் சேரமான் முன்னிலையில் தோன்றினர்கள். மன்னவன் எழுந்து அவர்களை வணங்கினன். “சிவனருளால் வஞ்சியிற் றோன்றிய மன்னவ! நாங்கள் பொதிய மலைக்குச் செல்கின்றோம். இமயம் செல்லல் உன் விருப்பம். அங்கே அருமறை அந்தணர் இருக்கின்றனர். அவர்களைக் காப்பது உன் கடமை, நீ நீடுழி வாழ்க!” என்று முனிவர்கள் ஆசிகூறிச் சென்றார்கள். பின் கொங்கணக் கூத்தரும் கொடுங்கருநாட்டரும் தமது கரிய சுருட்குஞ்சியில் தழைத்த மாலையணிந்து கருங்கயல் வனமுலை மாதருடன் குயில்கூவ, வண்டுயாழ் இசைக்க அரும்பு விழ இன்பப் பாடல்களைப் பாடிவந்தார்கள். “குடகரும் காரோ வந்தது! கோள்வளை மாதே! கோலங் கொள்ளாய்” என்று கார்காலப்பாட்டைப் பாடிவந்தனர், அரசன், இவர்களுக்கு ஏற்ற தகுதியில் பரிசளித்து இனிது இருந்தான்.

**கன்னர் தூதும் தென்னவன்தூதும்**

அப்போது வாயிற்காப்போன் வந்து “அரசே! நாடக மகளிர் ஐம்பத்திருவரோடும், இசையாளர் இருநூற்றெண்மரோடும், மற்று தேரும், யானையும், குதிரையுங் கொண்டு தூதுவர் தலைவன் சஞ்சயன் பாசறை வாயிலில் வந்துள்ளான்” என்று அறிவித்தான். அரசன் சஞ்சயனை உள்ளே வரும்படி ஆணைசெய்ய, அத்தூதுவர் தலைவனும் அரசன் முன்னே சென்று “அரசே! வேற்றுமையில்லாது உன்னோடு கலந்த நண்பராகிய நூற்றுவர்கன்னர் உன்னிடம் ஒரு செய்தி நுவலுமாறு என்னை ஏவினர். நீ வடதிசை நோக்கல் இமயமலையில் ஒரு கல் எடுப்பதற்காயின், அதன்

பொருட்டு நீ வழிநடந்து வருந்த வேண்டாம். எனது அரசரும், உனது நண்பருமான நூற்றுவர் கன்னர் தாமே இமயஞ்சென்று கல்லெடுத்து அதனைக் கங்கையாற்றில் நீராட்டி, உன்னிடம் கொண்டு சேர்ப்பதாகச் சொல்லிவரும்படி என்னை அனுப்பினர்" என்றான். இதைக்கேட்ட மன்னன் "பாலகுமாரன் மக்கள் கனகனும், விஜயனும், தமிழ் வேந்தரை இகழ்ந்தனர்; அவர் உயிர்க்குக் கூற்றம்போலச் சீறிச்செல்கிறது இச்சேனை ஆதலால்; கங்கையைக் கடக்கத் தோணிகளைத் தயார் செய்க" என்றான். சஞ்சயன் பணியேந்திச் சென்றான்.

அதன்பின்னர், தென்னவன் அனுப்பிய சந்தனமும், முத்தும்கொண்டு சில தூதுவர்கள், சேரன் முன்னே வந்து நின்றார்கள். தென்னவன் திறையைச் சேரன் ஏற்றுக் கொண்டு திருமுகம் எழுதிமுத்திரையிட்டுத் தூதுவர் கையிற் கொடுத்தான். அப்பால் சேரன் அங்குநின்றும் புறப்பட்டு நூற்றுவர் கன்னர் சேர்த்து வைத்திருந்த மரக்கலங்களின் உதவியால் கங்கையாற்றைக் கடந்து அதன் வடகரை சேர்ந்தான்.

## 4. வீரத்தமிழர் விரித்த போர்.

வடகரையில் கன்னர் சேரனைவணங்கி வரவேற்றனர். சேரனும், வடபூமியில் பகைவர் நாட்டில் வெல்லரும் படையுடன் பாசறையில் இருந்தான். அங்கே "தென்னாட்டவராகிய இத்தமிழர் ஆற்றலை யாம் காண்போம்" என்று வீரியம் பேசி உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், முதலிய மன்னர் கூடிக் கேண்மையிற் கலந்து கனகவிஜயர் சேனைக்கடலுடன் மனமொத்துச் சேரமானை எதிர்த்து வந்தனர். எழுந்தான் செங்குட்டுவன், பசிபற்றிய சிங்கம் பதைத்துப் பிளிறிய யானைகள் கூட்டத்தில் பீறிட்டுப் பாய்ந்தாற்போலத் தன்னை எதிர்த்த பகைவர்மேற் பாய்ந்து கைகலந்தான்.

**வடபோரில் செங்குட்டுவன் வெற்றி**

கதிரைக் கடிந்த கொடிகள் கட்டின்றிப் பறந்தன. கொடும்பறைகள் கொட்டின; நீள்கொம்பும், வெண்சங்கும் ஊதின; இடிக்குரல் முரசம் அதிர்ந்தது. சிலைத்தோள் ஆடவர், செருவேற்கையர், கறைத்தோல் மறவர், வெண்

கோட்டு யானையர், வேகக்குதிரையர், அனைவரும் ஆர்த்துப் பொருதனர். வீரவெற்றியில் விளங்கும்சேரன் தும்பைமாலை சூடிய பதினெட்டு நாழிகை நேரத்தில் வெற்றிக் கொடியோடு தமிழ்ச்சேனை விளங்கிற்று. ஆற்றாத சிலர், "இத் தமிழ் மறவர் நம்மைக் கொன்றே தீர்ப்பர் என்றறிந்து, சடையும், காவியுடையும், சாம்பற்பூச்சும் புனைந்து துறவிகள் போலவும், பாடுநர் போலவும், ஆடுநர் போலவும் பலதிசைகளிலும் பறந்தோடினர். வணங்கா வாயினராகிய கனகவிஜயர்கள் சேரன் கைப்பட்டுக் கொடுங்காவலில் இருந்தார்கள்.

இவ்வாறு போர்க்களம் பிணக்களமாக வென்ற செங்குட்டுவன், வடதிசை சென்று இமயத்தில் கல் பார்க்கத் தூதரை விடுத்தான். அவர்களிடம் முன்னே முனிவர் வேண்டியபடி அத்தணரைப் போற்றிக் காக்கச் சொன்னான். நல்ல கல் நாடி அறிந்ததும் தனது வெற்றிப்படையை ஏவிக் கல்லைப் பெயர்த்தெடுத்து அக்கல்லைக் கனகவிசயர் தம்முடியேற்றி முறைப்படி கங்கையாற்றில் நீர்ப்படை செய்தான்.

## 5. மன்னர் முடியேறிய மாடலன் கண்ணகி.

செங்குட்டுவன் கங்கையின் தென்கரை வெளியில் பாசறையமைத்துத் தங்கினன். பேரிசை பெற்ற பெருந்தமிழ் வேந்தனுக்கு வேண்டிய பெருமாளிகை, பொன்னொளிர் அரங்கம், பூம்பந்தர் பூம்பொய்கை ஆகிய பிறவும் அமைத்து, ஆரிய மன்னர் சேரரின்சினத்தை ஆற்றினர். தன் வீரச்செயலால் தண்தமிழ் நாட்டின் தலையாய நிலையை நிறுத்திய கால்கையற்ற வீரரை அழைத்து அவர்தம் ஆற்றலை வியந்து, ஆடகத்தால் அமைத்த அரிய தோடுகளைப் பரிசாக அளித்தான் சேரன். புலவர் கொற்றம்பாட, வெற்றித்திருமார்புடன் சேரன் அரசு வீற்றிருந்தான்.

**பாசறை நிலையும் மாடலன் உரையும்:**

அச்சமயம் மாடலமறையோன் அரசன்முன் தோன்றி "எங்கோ! வாழ்க! மாதவி பாடிய கானல்வரிப் பாட்டு கனகவிஜயர் தம் முடித்தலை நெரித்தது" என்று நயம்பட உரைத்தான். சேரன் உடனே வியந்து "நான்மறையாள! யாது கூறினை? உன் உரையின் பொருள் என்ன?" என்று

கேட்டான். அரசே! கடல் விளையாட்டிற்கு, மாதவி கோவலன் சென்றார்கள். அங்கே யாழ் எடுத்துக் கானல்வரியைக் காதற்பொருளிற் கலந்து பாடினர். கொடுவினைப்பயனால் இருவர் மனமும் இருபிளவாகி, கோவலன் கண்ணகி மனையை அடைந்தான். கண்ணகி-கோவலர் காற்சிலம்பு விற்றுப்பொருள் தேட மதுரை வந்தனர், அச்சிலம்பால் கோவலன் கள்வனாகிக் கொலைபட்டான்; கண்ணகி இச் செய்திகேட்டு, இதயமிழந்து, இமைப் பொழுதில் பாண்டிய மன்னனிடம் தன்பழுதில் வாழ்வைக்காட்டி, உன்னாடு புகுந்து வடதிசை மன்னர் மணிமுடியேறினாள்." என்று தன் குறிப்புரைக்கு விளக்கங் கூறினான் மாடலன். அதன் பின் மாடலன் "அரசே! நான்பொதிகை வழியாக மதுரை போக நேர்ந்தது; அங்கே கோவலன் இறந்ததால் பாண்டியன் பழிப்புற்றான் என்று கேள்வியுற்ற மாதரி, நள்ளிரவில் நெருப்பில் பாய்ந்து இறந்தாள். கடுந்தவக் கவுந்தியடிகள், உண்ணாநோன்பால் உயிர்விட்டாள். இவையெல்லாம் அறிந்து, என் பதியாகிய புகார் நகர் சென்றேன். அங்கு தன் மகனுக்கும், மருமகளுக்கும், மதுரை வேந்தனுக்கும் உற்ற நிலையை உணர்ந்து, தன் தனத்தையெல்லாம் தானஞ் செய்து துறவறம் புகுந்தான்கோவலன் தந்தை. கண்ணகியார் தந்தையும் அவ்விதமேசெய்தான். இன்னும், காதலன் கதியறிந்த மாதவி,கலங்கிக் கருத்தற்ற வாழ்வைக் கைவிட்டுத் தவவாழ்வு தழுவினாள். அவள் மகளாகிய மணிமேகலையையும் மாதவத்தில் செலுத்தினாள். இத்தீச்செய்தி கேட்ட பாவம் நீங்க கங்கை நீரில் மூழ்கி, இங்கு வந்தேன்" என்றான்.

"நெடுஞ்செழியன் விண்ணுலகு அடைந்தபின், தென்னவர் நாடு என்னவாயிற்று?" என்று வினவினான் சேரன். அதற்கு மாடலன் "ஒரு பகலில் ஒன்பது பகைவரின் ஒளியொடுக்கிய மைத்துனன் கிள்ளிவளவன் வழிவந்த சேரரே! வெற்றி வேற்செழியன் கொற்கையில் இருந்தான். அவன் பத்தினிப் பெண்ணுக்கு வழிபாடு செய்து ஏழ்பரித்தேரில் காலைக் கடவுள் கால் எடுத்து வைப்பதுபோல் அவ்விளம் பாண்டியன் அரியணைப்படியில் கால்வைத்து ஏறி அரசியலை மேற் கொண்டான்" என்று விடையளித்தான்.

இங்ஙனம் மாடலனும் மன்னனும் உரையாடும்பொழுது பகல் சென்றது. மாலை செந்தீ எங்கும் பரந்தது. செவ்வானத்தில் வெண்பிறை விளங்கிற்று.

**கணிதன் உரையும் நீலன் தூதும்:**

அப்போது காலக்கணிதன் "அரசே! நாம் வஞ்சிவிட்டு இன்று முப்பத்திரண்டு மாதங்கள் கழிந்தன" என்று மொழிந்தான். மாடலனை மீண்டும் சேரன் நோக்கி "பகைசெய்த ஒன்பது இளங்கோ வேந்தர் இறந்தபிறகு சோழன் நலங்கிள்ளியின் கொற்றமும் கோலியல்பும் கேடின்றி நடக்கின்றனவா?" என்று வினவினன். "எங்கோ வாழ்க! ஒரு சோழன் மூன்று தூங்கெயில் எறிந்தான். புறவைக் காக்கப் பருந்தின் பசிக்குத் தன் உடலைக் கொடுத்தான் ஒரு சோழமன்னன், காவிரி நாட்டாருக்கு எக்காலமும் கலக்கமில்லை" என்றான் மறையோன். இவற்றைக் கேட்ட சேரன், மறையோருக்குத் தன் நிறையுள்ள பொற் குவையைக் கொடுத்தான். அப்பால் ஆரிய மன்னர் நூற்றுவரையும், தமது நாட்டுக்கேக விடையளித்தான். அருந்தமிழாற்றல் அறியாது தன்னோடு மலைந்த கனகவிசயரை மற்றைய தமிழ் வேந்தர் இருவருக்கும் காட்டிவரும்படி நீலன் என்னும் ஒற்றனை அனுப்பினன்.

## 6 ஆர்வமும் உவகையும் அளந்த வஞ்சி.

பொழுது புலர்ந்தது. குடதிசையாளும் கொற்றவேந்தனை செங்குட்டுவன், வடதிசைத்தும்பையும், வாகையும் முடித்துத் தனது வெற்றிப் படையுடன் தென்றிசைப் பெயர்ந்து வஞ்சிவருகின்றான்.

**வேந்தன் வரவை வேண்மாள் அறிதல்:**

பூவேலைகள் பூத்த பொற்காற் கட்டிலில்; ஆண், பெண் அன்னங்கள் அணைந்து இணங்கும் போது நெஞ்சினின்றும் உதிரும் மென்மயிர் செறிந்த துணை அணைப் பள்ளியில் அரசி வேண்மாள் துயின்றாள். வடக்கிலிருந்து வரும் சேரன் செய்தியைச் சொல்லச் செவிலியர் துயில் எழுப்பினர். "பெருமகன் வந்தான்; நின் செவ்வி நலம் பெருக! உனது நறுமலர்க் கூந்தல் நாள்மலர் பெருக" என்றனர்.

கவண்கல்லுடன் தினைப்புனத்தைக் காத்த மதுவுண் கானவர் மன்னர் வரவைக் காணக் காவல் விட்டனர்.

**நாட்டின் அணிநிலையுடன் அரசன் அரசியுடன் அமர்தல்:**

சேரன் வெற்றித் திங்களைப் பாராட்டி உயர்ந்த பரணிலிருந்து குறத்தியர் குறிஞ்சிப்பண் பாடினர். "பகடே! சேரன் அரசு பூண்கின்றான். நீயும் இந்த நுகத்தடி பூணுவாயாக!" என்று ஏருழவர் பாடினர் பேரிமயத்தின் பேசரும் ஆன் நிரைகளை நம் வில்லவன் கொணர்ந்தான், நீங்களும் அந்த ஆனிரைகளுடன் சேர்வீராக! என்று அரசனது ஆனிரைகளை நீர்த்துறைப்படுத்திக் கோவலர் குழலிசை ஊதினர். வானவன் வந்தான்; வளர் இளமுலை அரசியின் தோள் நலம் உண்ண வந்தான்; தும்பையும், பனம்பூவும், வாகையும் வேய்ந்து வந்தான்; மடவீர் யாமும் வஞ்சி பாடுவோம்." என்று ஆயப்பெண்டிர் இசை பாடினர். கோப்பெருந் தேவியும் செவிமடுத்து அக மகிழ்ந்தாள். தலைவன் பிரிவால் தளர்ந்த அவளது வெள்வளை செறிந்தது. அறங்காக்க மறவாள் பிடித்துப் பனைமலர் சூடிய சேரர் பெருமானும் மாலைப்பொழுதில் வஞ்சிநகர் புகுந்தான். மாதர் நெல்லையும், புல்லையும் தூவி மங்கலவிளக்கேந்தினர். மன்னன் தன் மனைபுகுந்தான். தமிழ்க் கொடிக்கு வாகைசூட்டிய தறுகண்வீரர் தத்தம் மனைபுகுந்தனர். அவர் மனைவியர் வேலும், வாளும் யானைக்கொம்பும் அழுத்திக் கிழித்த மணி மார்பு புண் ஆறும்படி; விம்மியெழுந்த தம் மார்பால் தணிவு செய்தனர். அவர் கூந்தல் அகிற் புகை மொண்டு முகில் போல் விரிந்தது; அதில் நுழைந்த முழுமதி போன்றன அவர் முகம்.

அரண்மனையில் அரசி வேண்மாள் அழகிய திங்களைக் காணவந்தாள். ஞாலம்புரக்கும் சேரர்கோன் அரசியுடன் அணி அரங்கு ஏறினன். அவ்வமயம்

"திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
பரிதிரு செங்கையிற் படுபறை யார்ப்பவும்
செங்கண் ணுயிரந் திருக்குறிப் பருளவும்
செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்
பாடகம் பதையாது சூடகந் துளங்காது
மேகலை யொலியாது மென்முலை யசையாது
வார் குழை யாடாது மணிக்குழ லவிழாது
உமையவள் ஒரு திறனாக வோங்கிய
இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்............

இவ்வாறு சிவபார்வதி நடனத்தை, வேதியர் வைகும் பாறையூர், கூத்தச்சாக்கையன் ஆடினன். அதைக் கண்டு சேரன் மகிழ்ந்தான்.

## 7. கண்ணகி கோயிலில் கண்ணகி.

சேரமான் வேத்தியல் மண்டபத்தில் அரியணை அமர்ந்தான். நீலன், மாடலனுடன் தோன்றி "அரசே! உமது ஆணைப்படி கனகவிசயரைக் கொண்டு சோழன் அரண்மனை சென்றேன். ஆரியர் இருவரையும் கண்ட சோழமன்னவன் "போர்க்களத்து வாளும் குடையும் கைவிட்டுத் துறவிக்கோலங் கொண்டு தப்பியோடிய அரசரைச் சிறையாகப் பிடித்தல் சிறப்பன்று" என்று கூறினன். அதன்பின் பாண்டிநாடு சென்றபோது, "அமர்க்களத்தைச் சேரனிடம் சேர்ப்பித்து விட்டுத் தவக்கோலங் கொண்டு தப்பியோடிய அரசரை அரண் செய்தல் அழகன்று இதுபோன்ற செய்கையை இதுவரை கண்டதுமில்லை கேட்டதுமில்லை" என்று உரைத்தான் என்று கூறினன். இதைக்கேட்டு அரசன் சினந்து எழுந்தான்.

**நீலன் செய்தியும் சேரன் கோபமும்:**

அச்சினத்தைக் கண்ட மாடலன் எழுந்து "மன்னர் மன்ன! சீற்றம் தணிக! வாழ்கநின் கொற்றம்! உன் வாழ்நாள் பொருநையாற்றின் மணலினும், பலவாக! நீ காசினி காக்கத்தொடங்கி ஐம்பது ஆண்டுகள் ஆயின; ஆயினும் அறக்களவேள்வி செய்யாமல், மறக்களவேள்வியே யாங்கணும்செய்தாய். உனக்குமுன் இந்தநாட்டை ஆண்ட அரசர்கள் எங்கே? இம்மனித உடம்பு நீர்க்குமிழி போன்றது, செல்வமும் இளமையும் நில்லா வென்பது நீ அறிந்ததேயாகும். நீயும் ஆண்டில் மூத்து நரையும் திரையும் கண்டாய். விண்ணோர் மண்ணோராக மாறிவருவர். மக்கள் யாக்கை விலங்கின் யாக்கையாய் எய்தினும் எய்தும். ஆடுங்கூத்தர் போல ஆருயிர் ஒருவழியாக நில்லாது, வினைவழியாகவே செல்லும் என்பது செம்மையோர் செம்மொழியாகும். எழுமுடி மார்ப! நீ இவ்வுலகில் பிறந்து இறக்கும் மற்றைய மக்கள் போல் மண்ணில் மடிதல் மாண்பல்ல; ஆதலின் வீடுபேறு தரும் வியத்தகு வினையில் விருப்பம்வைக்கவேண்டும். அதனையும் நாளை நாளை என்று நலியவிடுதல் நல்லதல்ல; நீ ஊழி

**மாடலன் அறிவுரை:**

யோடு ஊழி உலகம் காத்து நீடு வாழ்க!" என்றான். உடனே உத்தம அரசன் உள்ளம் மாறி உயர் விழாவில் விளங்கிய வேள்விக்கு உடையான யாவும் அமைத்திட அமைச்சருக்கு ஆணையிட்டான். ஆரிய அரசரையும் அருந்தளையின் நின்றும் விடுவித்து அரண்மனை ஒன்று காட்டி அதில் ஆவன செய்ய வும் கட்டளையிட்டான். அப்பால் அந்தணர், ஆசான், பெருங் கணி, கருத்துடைக்கம்மியர், இவரோடு சென்று சிற்ப நூல்வல்லார் சிறப்புடன் செய்த பத்தினிக் கோட்டத்தில் தெய்வ வடிவாய கண்ணகியை நிறுத்தி நற்கலனணிந்து பூம்பலி செய்து காப்புக்கடை நிறுத்தி வேள்வியும் விழாவும் அடுத்த அம்மங்கல விழாவினை மாண்புற நடத்தினான்.

கண்ணகி:

சாத்தான் மனைவியும் கண்ணகி தோழியுமாகிய தேவந்தி கண்ணகியின் செய்தி கேட்டு மதுரை வந்து அங்கு ஐயையுடன் மலைநாடு புகுந்து பத்தினிக் கோயிலை அடைந்தாள். அவர்கள் செங்குட்டுவனிடம் தாம் இன்னார் என்று அறிவித்தனர். அரசன் அவர்சொல் மடுத்தான். கண்ணகியும் மின்வடிவாகத் தோன்றி

"தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன் கோயில்
நல்விருந் தாயினான் நான் அவன்தன் மகள்
வெண்வேலான் குன்றில் விளையாட்டு யான் அகலேன்
என்னோடுந் தோழிமீர் எல்லீரும் வம்மெல்லாம்.

என்று பேசினாள். செங்குட்டுவன் வியந்தான். உடனே வஞ்சி மகளிரெல்லாம் பத்தினியின் தோழியராயினர்.

"வஞ்சியீர்! மறவேற்சேரன் அரசியின் ஆயத்தீர்! எல்லோரும் வாருங்கள்! சிலம்பால் செழியனை வென்று கொங்கையால் கூடலையழித்த அணங்கைப் பாடுவோம்! தென்னவன் மகளைப் பாடுவோம்! "செங்கோல்வளைய உயிர் வாழார் பாண்டியர் என்று எமது சேரன் புகழ, எமது நாடடைந்த பாவையைப் பாடுவோம்!" என்று மூவேந்தரைப் பாடியதும், தனக்குச் சிலைநாட்டுச் சிறப்புச் செய்த மன்னனை, "செங்குட்டுவன் நீடு வாழி" என்று வீரபத்தினி போற்றினாள்.

# அரும்பதவுரையும்— செய்யுட்களின் உரையும்.

பக்கம்.

2. ஓம்பும்—பாதுகாக்கும்
கண்ணோட்டம்—கருணை
பாக்கம்—பகுதி—பிரிவு

3. இருக்கை—இருப்பிடம்
கூலம்—சிறுதானியம்
மன்றம்—பொதுவிடம்

4. நாளங்காடி—காலையில் கூடும் சந்தை
நிணச்சோறு—இறைச்சி கலந்த சோறு

5. **"போதிலார்……………"**

தாமரைப்பூவிற் பொருந்திய திருமகளின் புகழுடைய வடிவு இவள் வடிவையொக்கும் என்றும்; குற்றமில்லாத அருந்ததியின் கற்பு இவள் கற்பை ஒக்கும் என்றும், உலகின் மாதரார் தன்னைத் தொழுது ஏத்தும்படி, விளங்கிய பெருங்குணங்களைக் காதலிப்பாள், அவள் கண்ணகி என்று பெயர் கூறப்படுவாள்.

கலம்—கப்பல்

6. செவ்வேள்—முருகன்

**"மண்தோய்ந்த………………"**

பூமி சிறக்கும்படி வளர்ந்த புகழுடையான்; பண்ணை வென்ற மொழியாராகிய மதிபோலும் முகத்தையுடைய மடவார் தமது தோழியர் கூட்டத்தில்; உலகிலே கண்டு துதிக்கப்படும் முருகன் என்று பாராட்டி அவன் இசையைப் பரப்பி, காதற் குறிப்பின் உட்கொண்டு ஏத்துதற்குரியான்; அவன் கோவலனென்று பெயர் கூறப்படுவான்.

அமளி—படுக்கை
சாளரம்—யன்னல்

7. தொய்யில்—சந்தனக்கோலம்
நெறிமிறழல்—ஒழுங்குதவறல்

**"மாசறு பொன்னே………………"**

பொன்-ஒளிக்கு, முத்து—ஊற்றுக்கு, விரை – (நறுமணம்) நாற்றத்துக்கு; கரும்பு—சுவைக்கு, தேன்—ஓசைக்கு ஆகிய ஐம்புல இன்பத்தின் நலம் அமைந்துள்ளது.

கணிகை—விலைமகளிர்
மஞ்ஞை—மயில்

8. கிழி—திரைச்சீலை
உள்ளீடு—உள்ளே பொதிந்து இருக்கும் பொருள்

9. களைகண்—ஆதரவு
மங்கலவணி—இயற்கை அழகு

10. கானல்—கடற்கரைச்சோலை
தூங்கு எயில்—தொங்கும் மதில்
கோட்டம்—கோயில்

13. "மன்னுயிர் எல்லாம்.................."
உலகில் நிலைபெற்ற உயிர்கள் யாவற்றையும் தாம் மகிழும் துணையோடு புணர்விக்கும் இனிய இளவேனிலென்பான் இளவரசன் ஆதலின் நல்வழிபடச் செய்யான். அந்திப்பொழுதாகிய யானையின் அரிய பிடரிலே தோன்றிய திங்களாகிய செல்வனும் நேர்மையானவனல்லன் ஆதலால் புணர்ந்தோர் சிறிது பொழுதைப்பிரியினும், பிரிந்து சென்றோர் தம் துணையை மறந்து வாராதொழியினும், மணம்பொருந்திய பூவாகிய அம்பு இன்பம் நுகரும் உயிரைக்கொண்டு விடுதல் புதுமையன்று இதனை அறிமின்!

14. "சலம்புணர் கொள்கை...................."
வஞ்சம் பொருந்திய கொள்கையையுடைய பொய்த்தியோடுங் கூடியொழுகியமையால் நம்குலத்திலுள்ளார் தேடித்தந்த மாலை போலும் பெரிய பொருட்குவையெல்லாம் கெட்டதனாலாய வறுமை எனக்கு வெட்கத்தைத் தருகின்றது.
சுடர்—சூரியன்
அழகர்—திருமால்

17. புள்ளினம்—பறவைக் கூட்டம்
ஓதை—சத்தம்
மஞ்சு—மேகம்

22. வழு—குற்றம்
நச்சி—விரும்பி

23. "கொங்கச் செல்வி................."
கொங்கநாட்டிற்குச் செல்வமாயுள்ளவள் குடமலை நாட்டினையாளும் செல்வி, தென்தமிழ் நாட்டின் பாவை; உலகோர் செய்த தவத்தின் கொழுந்து போல்வாள் இவ்வுலகிற்கு ஒப்பற்ற முழுமாணிக்கம் போன்று உயர்ந்த அழகிய பெண்மணி.

27. "புலவர் நாவில்..............."
உலகினைப் பல பொருளையும் விளைத்து உண்பித்துக் காக்கின்ற உயர்ந்த பெரிய ஒழுக்கத்தினையுடைய புலவர்களுடைய நாவின்கண் பொருந்திய திருமகளை ஒப்பாள்; வையை என்று சொல்லப்படுகின்ற

பருவம் பொய்யாத பாண்டியர் குலக்கொடியாள்; கண்ணகிக்கு மேல் வரும் துன்பத்தினைத்தான் முன்னரே அறிந்தாள் போல் தூய்மையுடைய பூக்களாகிய ஆடையால் தன் மெய் முழுதும் போர்த்து, தன்கண் நிறைந்த மிக்க நீரினை மறைத்து உள்ளடக்க, இவ்வியாறு நீர் ஆறு அன்று பூவாறு என்று புகழ்ந்து அன்னம் போன்ற நடையினையுடைய கண்ணகியும் கோவலனும் வணங்கி

30. **"இம்மை செய்தன....................."**
யான் அறிய இப்பிறப்பின் கண் நீ செய்தன யாவும் நல்வினையாகவும் ஒப்பற்ற தனிமையான் வருந்தி இத்திருவினை ஒத்த மாணிக்கத்தளிருடன் இவண் புகுந்தது முற்பிறப்பில் செய்த தீவினையின் பலனேயோ

33. **"ஆயர் பாடியின்....................."**
இம்மதுக்கண் இடையர்சேரியில் அசோதை என்பாள் பெற்றெடுத்த அந்த நல்லமுதமுண்ணும் புதிய காயாம்பூம் போலும் நிறத்தினை உடைய கண்ணனேதான், இவன் துயர்தீர்த்த இப்பலவாகியவளையளை அணிந்த தோளினையுடையாளும் முன்னர் நற்குலத்தோன்றிய தூய நீலமணி போலும் நிறமுடைய மாயோனைக் காளிந்தி யாற்றின் கண் துயர்தீர்த்த நப்பின்னை என்னும் விளக்கோதான்;'

34. குடிமுதற்சுற்றம்—தந்தைதாய் முதலியோர்
குற்றிளையோர்—குற்றேவல் செய்யும் மகளிர்
அடியார் பாங்கு—தொண்டர்பகுதி
ஆயம்—தோழியர் கூட்டம்
பேணியகற்பு—கற்பு இவளை விரும்பி வந்தது என்றபடி
மாறிவருவன்—விற்றுவருவேன்

37. அவலம்—துன்பம்

38. மருள்—மயக்கம், இடர்—துன்பம்
தார்மலிமணிமார்பு—நிறைந்த மலர்மாலைக்குள் முழுகும் நுமது அழகியமார்பு
ஈர்வதோர் வினைகாண்—வெட்டுவிப்பதோர் நின்தீவினைப்பயன்காண்
குருதி—இரத்தம், பொடி—புழுதி
உண்பதோர் வினைகாண்—நுகர்வதோர் தீவினையின் பயன்காண்

41. மன்பதை—உலகம்
மட்டார்—தேன்நிறைந்த
பட்டாங்கு—உண்மை
பட்டிமை—வஞ்சத்தன்மை

44. தொழுதகைமை—வணங்கும்தன்மை
திண்ணியதால்—உறுதியுடைத்தாம்

பாடுகம்—பாடுவோம்
மணவணி வேண்டுதும்—எம்மை மணம் செய்து கோடலை குறித்துப் பரவுவோம்

54. "திருநிலைச்சேவடி........................"
திருநிலை பெற்றிருத்தலையுடைய சிவந்த அடிக்கண்தண்டை ஒலிக்கவும்; சிவந்த கையிடத்தே தங்கிய பறை முழங்கவும்; ஆயிரம் சிவந்த கண்களும் தம் கருத்தினைப் புலப்படுத்தவும்; செவ்விய புடைபரந்து திக்குகளில் அலையும் மகளிர் அணியும் காலணியான பாடகமாது அசையாதே தோள்வளை நடுங்காதே; மேகலை ஒலியாதே, மெல்லிய முலை ஆடாதே, நீண்ட குழையாகிய காதணி அசையாதே; நீலமணி போலுங்கூந்தல் அவிழாதே; உமாதேவி தன் இடப்பக்கத்தினளாக மகாதேவனாகிய இறைவன் நடித்த கொடுகொட்டியை (திருமேனியின் ஒரு கூற்றிற் சிறிதும் அசைவில்லையாக ஆடினன் என்பதனால் அவ் வாட்டத்தின் அருமை புலப்படும்.)

56. வெண்வேலாள் குன்று—திருப்பரங்குன்று
தென்னவன்—பாண்டியன்
தேவர்கோன்—இந்திரன்
கோயில்—அரண்மனை

உ

# ஸ்ரீ காந்தா அச்சகம் - புத்தகசாலை,

## யாழ்ப்பாணம்.

**எங்கள் அச்சகப் புத்தகசாலையில்,**

இலக்கண இலக்கியங்கள், புராண இதிகாசங்கள், சமயநூல், நீதிநூல், முதலியவற்றோடு, பள்ளிக்கூட மாணவர்களுக்குரிய தமிழ், ஆங்கில பாடப்புத்தகங்கள், கொப்பிகள், கற்பலகை, பேனா, பென்சில் முதலிய எல்லா உபகரணங்களும் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

**அச்சிடுதற்குரிய உபகரணங்கள்:**

அச்சிடுதற்காகிய 'கிளேஸ்' காகிதம், 'றவ்' காகிதம், பலநிறக்காகிதம், 'பாய்ங்பேப்பர்', கலிக்கோ, மாபிள், மை வகை முதலியவைகளும் சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

**அச்சு வேலைகள்:**

இவ்வச்சகத்திற் சகலவிதமான புத்தகங்களும், சஞ்சிகைகளும் பெரிய சிறிய விளம்பரங்களும், விவாக விஞ்ஞாபனம் உபசரணைப்பத்திரங்கள் முதலிய பல சில்லறை வேலைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த முறையிலே தவணைதப்பாமற் செய்து கொடுக்கப்படும். எங்கள் வேலைத்திறமையை ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

விலாசம்:

மனேஜர்,

ஸ்ரீ காந்தா அச்சகம்,
213, K. K. S. ரோட்,
யாழ்ப்பாணம்.
(இலங்கை)